விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 273 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 01 திங்கட்கிழமை (18.09.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

தமிழர்கள் மீதான இலங்கையின்

## இனவாத போக்கை இந்தியா தடுக்க வேண்டும்



### திருமலை சம்பவம் தொடர்பில் சீமான்

(சென்னை)

ஈழத்தாயகத்தில் திருகோணமலை கப்பல்துறையில் தியாக தீபம் அண்ணன் திலீபன் அவர் 15


## கொழும்பு திரும்பியது விசாரணைக்குழு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையில் சிறுமியின் கை அகற்றப்பட்டமை தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக கொழும்பு சுகாதார அமைச்சில் இருந்து யாழ்ப் பாணத்துக்கு 15

ஜனாதிபதி ரணில் தலைமையில்

## தென்சீனக் கடல் வலய வட்டமேசை மாநாடு



(கொழும்பு)

தென் சீனா கடல் வலய 8ஆவது ஷென்ஸன் வட்டமேசை மாநாடு எதிர் வரும் ஒக்ரோபர் 24, 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் இலங்கையில் நடைபெற உள்ளது.

இந்த மாநாடு கொழும்பு 15

# திலீபனின் நினைவு ஊர்தி

# அடித்து நொருக்கப்பட்டது

- திருகோணமலையில் காடையர்கள் அடாவடி
- கஜேந்திரன் எம்.பி மீதும் தாக்குதல்



(திருகோணமலை)

திருகோணமலையில் தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்தி சிங்கக் கொடி ஏந்தி வந்த காடையர்களால் அடித்து நொருக்கப்பட்டது. (15ஆம் பக்கம் பார்க்க)



## யாழ்.பல்கலை மாணவி நேற்று சடலமாக மீட்பு

### கிளிநொச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, கோணாவில் பகுதியில் யாழ்.பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ பீட மாணவி ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

கிளிநொச்சி கோணாவில் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவியுமான வசந்தகுமார் டிலக்சியா என்பவரே தனது வீட்டில் தற் 15



திலீபனின் நினைவூர்தி மீதான தாக்குதல்

## இனவாதத்தின் உக்கிரம்

### சிறீதரன் எம்.பி காட்டம்

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் நினைவூர்தி மீதான தாக்குதல், இனவாதத்தின் உக்கிரத்தையே வெளிப்படுத்துகிறது என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

தியாகதீபம் திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய நினைவேந்தல் ஊர்திமீது, திருகோணமலை கப்பல் துறையருகே சிங்களக் 02

கதிரியக்க தொழில்நுட்ப நிபுணர் பற்றாக்குறையால்

## அனைத்து விதமான ஸ்கேன் சேவைகளும் தடைப்படும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

கதிரியக்க தொழில்நுட்ப நிபுணர் பற்றாக்குறை மற்றும் வெளிநாடுகளில் பணியாற்றும் நோக்கில் சிலர் வெளியேறியமையினால் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை, கொழும்பு தேசிய வைத்தியசாலை உள்ளடங்கலாக நாட்டின் பல பாகங்களிலும் உள்ள வைத்திய சாலைகளில் பயிற்சி பெற்ற நிபுணர்களின் கடுமையான பற்றாக்குறையால் பல வைத்தியசாலைகளில் CT, MRI மற்றும் PET 15

## கடலுக்குள் தவறிவிழுந்த மீனவர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பருத்தித்துறை மீன்பிடி துறைமுகத்தில் இருந்து நீண்ட நாள் மீன்பிடிக்க கடலுக்கு சென்ற கடற்றொழிலாளர் ஒருவர் படகில் இருந்து கடலுக்குள் தவறி விழுந்து உயிரி 15

## பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் மீண்டும் வர்த்தமானியில் பிரசுரம்

(கொழும்பு)

பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் மீண்டும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷவின் உத்தரவுக்கமைய, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் நேற்று முன்தினம் சனிக்கிழமை வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்த ஆண்டு மார்ச் மாதம் 22ஆம் திகதி, பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

பயங்கரவாதத் தடைச் சட்டமூலம் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல ஆயிரம் கடந்த பதிவுகள்

பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்

உங்கள் கல்யாண மாலை

சர்வதேச இலவச திருமண சேவையை உலகின் எப்பாகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள

www.kalyanamalai.lk

இணையத்தளத்தைப் பாருங்கள்

பதிவுக்கட்டணம் ரூபாய் 4,000/=



தொடர்புகளுக்கு :-
கல்யாண மாலை
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email : kalyanamalai.jaffna@gmail.com


## 97 வயதில் முதுமாணிப்பட்டம்
# மூதாட்டி சாதனை

(கொழும்பு)

இலங்கையில் 97 வயதுடைய அஸ்லின் தர்மரத்ன எனும் மூதாட்டி முதுமாணிப் பட்டம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

களனிப் பல்கலைக்கழகத்தில் பாலி பௌத்த கற்கைகள் முதுகலைப் பட்டதாரி நிறுவனத்தினால் இவ்வருடம் நடாத்தப்பட்ட பௌத்த கற்கையிலேயே அவர் முதுமாணி பட்டம் பெற்றுள்ளார்.

களனிப் பல்கலைகழகத்தில் கற்கும் மூத்த மாணவியும் இவர் எனும் பெருமையையும் பெற்றுள்ளார்.

குறித்த மூதாட்டி தனது 94வது வயதில் வித்யோதயா பல்கலைக்கழகம் நடத்திய திரிபிடக தர்மம் மற்றும் பாலி மொழி பரீட்சையில் சித்தியடைந்திருந்தார்.

இறுதித் தேர்வு எழுதும் போது அவர் 6 பெண் பிள்ளைகளின் தாய் என்பதுடன் வாழ்க்கையை எதிர்கொண்டு இந்த தேர்வுகளில் தேர்ச்சி பெற்று சாதனை நிகழ்த்தியுள்ளார்.

1952 ஆம் ஆண்டு பத்திர துறைப் பரீட்சையில் சித்தியடைந்த முதல் பெண்மணி இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (7)

# கண்ணீர் அஞ்சலி

அமரர் திருமதி சிவபாக்கியம் மாணிக்கவாசகர்

மலர்வு 1937.01.23
உதிர்வு 2023.09.14



சேவைக்காலம் : யா/வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்
உதவி ஆசிரியர் : 06.01.1964 – 18.02.1991 வரை
அதிபர் : 19.02.1991 – 10.07.1996 வரை

மீளாத்துயில் கொண்டு எம்மை ஆறாத்துயரில்
ஆழ்த்திச் சென்றீரே? கலையாத நினைவுகளுடன்
உதிரும் கண்ணீர் பூக்களால் அர்ச்சித்து
உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள்
கண்ணீர் துளிகளைக் காணிக்கையாக்குகிறோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்

## 4ம் ஆண்டு நினைவஞ்சலி — 25ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1949.12.21
மறைவு 2019.10.19

அமரர் மாணிக்கம் நாகேந்திரம்
(ஓய்வுநிலை தபால் அதிபர்
யாழ்.பிரதம தபாலகம்)

நேர்மைநெறி தவறாத நித்திலனே
பாசமழை பொழிந்த உத்தமனே
வந்தபணி சிறப்புறவே நிறைவேற்றி
அத்தனடி சேவைதர அகன்றவனே
நித்தமுனை நினைப்பதுவே எம் வேலை
வந்தவர்கள் யார்க்குமிங்கு நிரந்தரமேதுமில்லை
அங்கு நீயும் காத்திரு நாம் வருமளவும்
அமைதியொடு சாந்திகாணு அவனடியில்



தோற்றம் 1981.08.21
மறைவு 1998.08.25

அமரர் நிஷாலினி நாகேந்திரம் (சுகி)

வாரமென மாதமென ஆண்டுகளாய்
எத்தனைதான் காலமது விரைந்திடினும்
உனையிழந்த சோகமது மறைந்திடாது
சந்ததிகள் பெருகிட நீ வாழ்ந்திருந்தால்
கொஞ்சமென மனமமைதி கண்டிடுமே
வஞ்சமது செய்தனனே காலனவன்
நெஞ்சமது நெக்குருகி வருந்திடுதே
சென்றவளே அங்கமைதி கண்டிடுக

மீளாத்துயில் கொண்டு எம்மை
ஆறாத் துயரில் ஆழ்த்திச் சென்றீரே!
கலையாத நினைவுகளுடன் உதிரும் கண்ணீர்
பூக்களால் அர்ச்சிக்கின்றோம் உம் ஆத்ம சாந்திக்காய்!

அல்வாய் தெற்கு,
இலகடி, அல்வாய்.

திருமதி ஞானகலாவதி நாகேந்திரம்

(17123)

## திலீபனின்...

காடையர்கள் மேற்கொண்டுள்ள மிலேச்சத்தனமான தாக்குதல், இந்த நாட்டில் இனவாதத்தீ நீறுபூத்த நெருப்பாகவே இன்னமும் கனன்றெரிகிறது என்பதை இன்னுமொருமுறை நிரூபணம் செய்திருக்கிறது.

இரு நாட்டு அரசுகளின் கவனத்தையும், ஈழத்தமிழர்களுக்கான அடிப்படை நியாயத்தையும் கோரி 36 ஆண்டுகளின் முன்னர் அகிம்சைப் போராட்டம் நடாத்திய, திலீபன் என்கிற தியாகியின் உருவப்படத்துக்கும், அதைத் தாங்கிய ஊர்திக்கும், அவ்வூர்தியோடு இணைந்து பயணித்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனுக்கும் இந்த நிலை என்றால், எந்தவித நியாயப்பாடுகளுமற்று இத்தனை ஆவேசமாய் இனவாதத்தைக் கக்கும் சிங்களவர்களோடு, இந்த நாட்டில் தமிழர்கள் இணைந்து வாழ்வது எத்தனை தூரம் சாத்தியமானது என்பது பற்றி, இனிமேலேனும் சர்வதேச சமூகம் தனது கவனத்தைச் செலுத்த வேண்டும்.

ஜெனீவா அமர்வுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற சம நேரத்தில், தமிழர்களையும், அவர்களது போரியல் நியாயத்தையும், இனத்துக்காக நிகழ்த்தப்பட்ட தியாகத்தையும் காலில் போட்டு மிதித்து, தங்களது அடக்குமுறை மனோபாவத்தை சிங்கக்கொடிகளின் மூலம் வெளிப்படுத்தியுள்ள சிங்களக் காடையர்களது செயல் கடும் கண்டனத்துக்குரியது.

தமிழர்களது உணர்வுநிலைகள் குறித்தும், அவர்களது சுயாதீன உரித்துகள் குறித்தும் எப்போதும் கள்ளமௌனம் காக்கும் ஆட்சி அதிகார பீடங்கள், இவ்விடயத்தில் உரிய நடவடிக்கை எடுப்பார்கள் என நாம் துளியும் எதிர்பார்க்கவில்லை.

இருந்தபோதும், ஒரு சுதேசிய இனத்தின் அடிப்படை உணர்வுநிலைகளை வலிந்து சீண்டி, இரு இனங்களுக்குமிடையிலான முரண்நிலைகளை மீண்டும் மீண்டும் கொதிநிலைக்குத் தள்ளி அரசியல் லாபம் ஈட்டும் சக்திகள் இனங்காணப்பட வேண்டும்.

ஈழத்தமிழர்களது தன்னாட்சிக் கோரிக்கை நியாயபூர்வமானது என்ற செய்தியை சர்வதேச சமூகத்தின் செவிகளில் அறைகூவல் செய்வதற்கு இந்தச் சம்பவம் ஓர் சாட்சியமாய் அமைந்திருக்கிறது. இதன் விளைவென்பது, எமது மக்களிடத்தே இனம் குறித்த ஓர்மத்தை தணியாது தகிக்கச் செய்துகொண்டே இருக்கும் என்பதை சிங்களவர்களும் உணரும் காலமொன்று உருவாகியே தீரும் என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (7,104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட-கிழக்கில் படைக் குறைப்பு இல்லை
# இராணுவப் பேச்சாளர் திட்டவட்டம்

**(கொழும்பு)**

**வடக்கு, கிழக்கில் நிறுத்தப்பட்டுள்ள இராணுவத்தினரின் எண்ணிக்கையைக் குறைப்பதற்குத் தீர்மானிக்கவில்லை என இலங்கை இராணுவம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.**

வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களுக்குமான கட்டளைத் தளபதிகளின் எண்ணிக்கை இரண்டாகக் குறைக்கப்பட்டுள்ளது என வெளியான தகவல் தொடர்பில் கருத்து வெளியிட்ட இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரவி ஹேரத் இதனைத் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் இராணுவ ஆட்குறைப்பு செய்யப்படவில்லை எனவும் கட்டளைத் தளபதிகளின் எண்ணிக்கை குறைக்கப்படவில்லை எனவும் அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 14 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கில் அதிகளவான இராணுவத்தினர் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், பொதுமக்களின் பெருமளவான காணிகளும் படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் நிலையில், அவ்வப்போது படையினரின் தேவைக்காகக் காணிகளும் அளவீடு செய்யப்படுகின்றன.

இந்நிலையில், வடக்கு, கிழக்கில் உள்ள இராணுவத்தினரை வெளியேற்ற வேண்டும் என அரசியல்வாதிகளும் பொது மக்களும் சமூகச் செயற்பாட்டாளர்களும் அரசிடம் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

மேலும் வடக்கு, கிழக்கில் அதிகளவான படையினர் நிறுத்தப்பட்டுள்ள போதிலும் போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட குற்றச் செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது எனச் சமூகச் செயற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான நிலையிலேயே, வடக்கு, கிழக்கில் படையினரின் எண்ணிக்கையைக் குறைக்கப் போவதில்லை என இராணுவம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது. (நி)

# நாட்டிலுள்ள 80 சதவீதமான இளைஞர்கள் வெளிநாடு செல்ல எதிர்பார்ப்பு

## ஆய்வில் தகவல்

(கொழும்பு)

நாட்டிலுள்ள 18 முதல் 25 வயதுக்கு இடைப்பட்டவர்களில் 80 சதவீதமானவர்கள் வெளிநாடுகளுக்கு செல்வதை எதிர்பார்த்துள்ளதாக ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

களனிப் பல்கலைக்கழக மனிதவள முகாமைத்துவப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வின் முடிவில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டிலிருந்து வெளியேற விரும்புபவர்களில் 75 சதவீதமானோர், தாம் வெளிநாடுகளுக்கு செல்ல விரும்புவதற்கான பிரதான காரணமாக அரசாங்கத்துக்கு எதிர்காலம் பற்றிய தெளிவான சிந்தனை இல்லை என்பதை குறிப்பிட்டுள்ளதாக களனி பல்கலைக்கழக மனிதவள முகாமைத்துவ பேராசிரியர் பிரசாதினிகமகே தெரிவித்தார்.

அத்துடன் சுகாதாரம், கல்வி உள்ளிட்ட தேவைகளை பூர்த்தி செய்வதில் உள்ள சிரமம் மற்றும் அநாவசியமான வரிவிதிப்பு ஆகியவற்றினாலும் அவர்கள் வெளிநாடு செல்ல விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார். (நி)

# மரக்கிளை விழுந்து மாணவி உயிரிழப்பு

(கண்டி)

உந்துருளியின் பின்னால் அமர்ந்து சென்ற பாடசாலை மாணவியின் தலையில் மரக்கிளை விழுந்ததில் அந்த மாணவி உயிரிழந்துள்ளார்.

தலவாக்கலை - தவலந்தன்ன வீதியின் பூண்டுலோயா, பலுவத்த பிரதேசத்தில் இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.

இதன்போது படுகாயமடைந்த குறித்த மாணவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அக்கரபத்தனை பம்பரகலை பகுதியில் வசித்து வந்த விஜயராஜ் திவ்யராணி என்ற 17 வயது பாட சாலை மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கண்டியில் உள்ள உறவினர் வீட்டில் இருந்து தனது தந்தையுடன் அக்கரப்பத்தனை பகுதிக்கு உந்துருளியில் திரும்பிக் கொண்டிருந்த போதே இந்த குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (நி)

IMS
Institute of Medical Sciences
வட மாகாணத்தில் முதன்முறையாக சர்வதேச அங்கீகாரம் பெற்ற NVQ 6
சான்றிதழ் பெற்ற தாதியர் கல்வி நிறுவனம்

Institute of Medical Sciences
புதிய பிரிவுகள் ஆரம்பம்
TVEC Approved
Higher National
Diploma In Nursing NVQ - 6
நுழைவுத் தகைமை
A/L இல் எந்த ஒரு பிரிவிலேனும் 03 பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் போதுமானது
கற்கைநெறிக் காலம் - 03 வருடங்கள்
விண்ணப்ப முடிவுத்திகதி - 10.10.2023
APPLY NOW
September Intake
(சி-7274)
Green Memorial Hospital
Manipay
- 0760163515 / 0212256335
- theimsjaffna@gmail.com
- www.imslanka.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரை வென்றது இங்கிலாந்து




நியூசிலாந்து கிரிக்கெட் அணி, இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 4 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் போட்டித் தொடரில் பங்கேற்று விளையாடியது. முதல் 3 ஆட்டங்களில் இங்கிலாந்து அணி 2 வெற்றிகளும் நியூசிலாந்து 1 வெற்றியும் பெற்றிருந்தன.

இந்நிலையில் இரு அணிகளுக்கு இடையிலான 4 ஆவது மற்றும் கடைசி ஒருநாள் ஆட்டம் லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் நடந்தது.

டாஸ் வென்ற இங்கிலாந்து பட்டிங் தேர்வு செய்தது. அதன்படி, முதலில் ஆடிய இங்கிலாந்து நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 311 ரன்கள் சேர்த்தது. டேவிட் மலான் சிறப்பாக ஆடி சதம் விளாசினார்.

அவர் 127 ரன்களில் அவுட்டானார். ஜோஸ் பட்லர் 36 ரன்னும் ஜோ ரூட் 29 ரன்னும் லிவிங்ஸ்டோன் 28 ரன்னும் எடுத்தனர். நியூசிலாந்து சார்பில் ரச்சின் ரவிச்சந்திரா 4 விக்கெட்டும் டேரில் மிட்செல், மேட் ஹென்றி தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதையடுத்து, 312 என்ற இலக்கை நோக்கி நியூசிலாந்து அணி களமிறங்கியது. அந்த அணியின் ரச்சின் ரவிச்சந்திரா சற்று நிலைத்து நின்று ஆடி அரை சதம் கடந்தார்.

அவர் 61 ரன்னிலும் ஹென்றி நிக்கோல்ஸ் 41 ரன்னிலும் ஆட்டமிழந்தனர். இறுதியில், நியூசிலாந்து அணி 38.2 ஓவரில் 211 ரன்களுக்கு ஓல் அவுட்டானது.

இதன்மூலம் இங்கிலாந்து அணி 100 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இதன் மூலம் நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடரை 3-1 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி கைப்பற்றியது. (நி-6)

# ஆறுதல் வெற்றியோடு வெளியேறிய பங்களாதேஷ்



ஆசியக் கிரிக்கெட் தொடரின் சுப்பர்-4 சுற்றின் ஆறாவது லீக் போட்டியில், பங்களாதேஷ் கிரிக்கெட் அணி ஆறு ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஒருநாள் கிரிக்கெட்டில் இந்தியா அணிக்கெதிராக பங்களாதேஷ் அணி பெற்றுக் கொண்ட எட்டாவது வெற்றி இதுவாகும்.

கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய கிரிக்கெட் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 255 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இந்திய கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில் சர்துல் தாகூர் 3 விக்கெட்டுகளையும் மொஹமட் ஷமி 2 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.


இதனைத் தொடர்ந்து 266 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இந்திய கிரிக்கெட் அணியால் 49.5 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 259 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால், பங்களாதேஷ் கிரிக்கெட் அணி ஆறு ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, சுப்மன் கில் 121 ஓட்டங்களையும் அக்ஸர் பட்டேல் 42 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், முஷ்டபிசுர் ரஹ்மான் 3 விக்கெட்டுகளையும் டன்சிம் ஹசன் மற்றும் மெயிடி ஹசன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் சகிப் அல் ஹசன் மற்றும் மெயிடி ஹசன் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக, பங்களாதேஷ் அணியின் சகிப் அல் ஹசன் தெரிவு செய்யப்பட்டார். (நி-6)

# ரொனால்டோ அணி திரில் வெற்றி



அல்ரேட்அணிக்குஎதிரான போட்டியில் அல் நஸர் அணி 3-1 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது.

சவுதி ப்ரோ லீக் தொடரில் அல் நஸர் - அல் ரேட் அணிகள் மோதின. கிங் அப்துல்லா ஸ்போர்ட் சிட்டி மைதானத்தில் இந்தப் போட்டி நடந்தது.

ஆட்டத்தின் 45+1 ஆவது நிமிடத்தில் அல் நஸரின் சாடியோ மானே முதல் கோல் அடித்தார். அதன் பின்னர் மற்றொரு வீரரான தலிஸ்கா 49 ஆவது நிமிடத்தில் அபாரமான கோல் அடித்தார்.

அடுத்து 78 ஆவது நிமிடத்தில் தன்னிடம் வந்த லாவகமாக கையாண்ட ரொனால்டோ, எதிரணியை ஏமாற்றி கோல் அடித்தார்.

இதற்கு உடனடியாக அல் ரேட் அணியால் பதிலடி கொடுக்க முடியவில்லை. எனினும், ஆட்டத்தின் 89 ஆவது நிமிடத்தில் அல் ரேட் அணிக்கு பெனால்டி வாய்ப்பு கிடைத்தது.

அந்த அணியின் மொஹமது ஃப்பௌஸர் பெனால்டியை கோலாக மாற்றினார். எனினும் மேற்கொண்டு அல் ரேட் அணியால் கோல் அடிக்க முடியாததால் அல் நஸர் 3-1 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் அல் நஸர் அணி புள்ளிப் பட்டியலில் 5 ஆவது இடத்தில் உள்ளது. அல் ஹிலால் அணி முதலிடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.(நி-6)

# சக அணி வீரரின் சாதனையை முறியடித்த பென் ஸ்டோக்ஸ்



இங்கிலாந்து அணியின் ஓல்ரவுண்டர் பென் ஸ்டோக்ஸ் நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் அபார சாதனை படைத்துள்ளார்.

நியூசிலாந்து அணிக்கு எதிரான 3 ஆவது ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து 181 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இமாலய வெற்றி பெற்றது.

இப்போட்டியில் சிக்ஸர் மழை பொழிந்த இங்கிலாந்து வீரர் பென் ஸ்டோக்ஸ் 124 பந்துகளில் 182 ஓட்டங்கள் குவித்தார். இது அவருக்கு ஒருநாள் போட்டியில் ஒரு இன்னிங்சில் எடுத்த அதிகபட்ச ஸ்கோர் ஆகும்.

அதேபோல் ஒருநாள் போட்டியின் ஒரு இன்னிங்ஸ் அதிக ஸ்கோர் எடுத்த இங்கிலாந்து அணி வீரர் என்ற சாதனையை பென் ஸ்டோக்ஸ் படைத்தார்.

இதற்கு முன்பு 2018ஆம் ஆண்டு ஜேசன் ராய் 180 ஓட்டங்கள் எடுத்ததே அதிக பட்ச ஸ்கோராக இருந்த நிலையில், ஸ்டோக்ஸ் அந்த சாதனையை முறியடித்துள்ளார்.

ஒருநாள் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்த ஸ்டோக்ஸ், மீண்டும் களத்திற்கு வந்து சாதனை படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

# சேட்டைவிடுவதில் கோலியின் விளையாட்டுக்கு அளவே இல்லை




கிரிக்கெட் களத்தில் ஆடும் லைவனில் இருந்தாலும் இல்லை என்றாலும் விராட் கோலி ரசிகர்களை மகிழ்விக்காமல் இருந்ததே இல்லை எனலாம். வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் தனக்குள் இருக்கும் காமெடியை வெளிப்படுத்த விராட் கோலி தவறியதே இல்லை.

அந்த வகையில், அண்மையில் இந்தியா மற்றும் வங்காளதேசம் அணிகள் இடையே நடைபெற்ற ஆசிய கோப்பை தொடரின் கடைசி லீக் போட்டியில் விராட் கோலி ஆடும் லைவனில் சேர்க்கப்படவில்லை. இந்திய அணி ஆசிய கோப்பை 2023 தொடரின் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்று விட்டதால், குறித்த போட்டியில் விராட் கோலிக்கு ஓய்வு அளிக்கப்பட்டு இருக்கிறது.

அந்த வகையில், போட்டியின் முதல் பாதி ஆட்டத்தின் போது, "வாட்டர் பாய்" ஆக களத்தில் இருந்த இந்திய அணி வீரர்களுக்கு நீராகாரம் கொண்டு வந்தார்.

அப்போது விராட் கோலி வேகவேகமாக ஓடி வந்தார். திடீரென என்ன நினைத்தாரோ தெரியவில்லை விராட் கோலி ஓடிய விதம் அனைவரையும் சிரிப்பலையில் மூழ்க செய்தது. இந்த வீடியோ தற்போது சமூக வலைத்தளங்களில் வைரல் ஆகி வருகிறது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறுகைகளுக்கான அறிவித்தல்
## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்

வைத்தியசாலைகளுக்கு அழுக்குத் துணிகள் சலவைச் சேவையினை வழங்குவதற்கான பெறுகை - 2023/2024

தலைவர், பிராந்திய பெறுகைக் குழு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழுள்ள வைத்திய சாலைகளுக்கு அழுக்குத் துணிகள் சலவைச் சேவையினை வழங்குவதற்குத் தகைமையுள்ள விலை மனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுப் பத்திரங்களினை கோருகின்றார்.


| தொ.இல | பெறுகை இலக்கம் | பெறுகையின் தன்மை | சேவை வழங்க வேண்டிய நிலையம் | கேள்வி உத்தரவாத முறி |
|---|---|---|---|---|
| 01 | H/LS/2023/ 01 தொடக்கம் 10 வரை | அழுக்குத் துணிகள் சலவைச் சேவை | (அ)பருத்தித்துறை பிரதேசத்திற்குட்பட்ட ஆதார வைத்தியசாலை, சத்திரசிகிச்சை கூடம், பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார பராமரிப்பு நிலையங்கள் (PMCU) | 10,000.00 |
| | | | (ஆ)தெல்லிப்பளை பிரதேசத்திற்குட்பட்ட ஆதார வைத்தியசாலை, சத்திரசிகிச்சை கூடம், பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார பராமரிப்பு நிலையங்கள் (PMCU) | 10,000.00 |
| | | | (இ)சாவகச்சேரி,ஊர்காவற்றுறை, கோப்பாய், சங்கானை, சண்டிலிப்பாய்,வேலணை, நல்லூர் யாழ்ப்பாணம் மற்றும் உடுவில் | 3000.00 |

01. பெறுகைக் கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.
02. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலை மனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
    - அ. விலைமனுதாரர் வலிதான வியாபாரப் பெயர் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    - ஆ. அத்துடன் தொடர்புடைய வழங்கல் சேவையினை வழங்குவதற்கான அனுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    - இ. அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
03. ஒப்பந்த அளிப்பிற்குத் தகைமை பெறுவதற்கு விலை மனுதாரர்கள் பகுதி 2 - பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக் குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
04. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, 572/3 வைத்தியசாலை வீதி யாழ்ப்பாணம்** எனும் முகவரியிலும் 021 222 3725,021 222 6253,021 221 4966 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவும் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை இவ் முகவரியில் வேலை நாட்களில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணிவரை பரிசீலிக்க முடியும்.
05. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தமிழ் மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் 06 ஒக்டோபர் 2023 ஆம் திகதி வரை 09:00 மணிதொடக்கம் 15:00 மணிவரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா 1,000.00 அலுவலக காசாளரிடம் செலுத்தி அப்பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.
06. பெறுகை ஆவணங்கள் 09 ஆம் திகதி ஒக்டோபர் 2023 அன்று காலை 10.00 மணிக்கு முன்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
07. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று திணைக்களத் தலைவரின் கீழ் குறிப்பிட்டுள்ள அமைவிடத்தில் 03 ஆம் திகதி ஒக்டோபர் 2023 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நடைபெறும்.
08. மேற்குறிப்பிட்ட பெறுகைப் பிணைப்பணம் ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் இப்பிணைப்பணம் அலுவலக காசாளரிடம் அல்லது வங்கியில் செலுத்தி அவ் ஆவணத்தினை கேள்வி ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும்.
09. இவ்விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்தோ எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனு கோரலை ரத்து செய்வதற்கு பெறுகைக்குழுத் தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

(சி-7272)

**வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,**
**தலைவர்,பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனை,யாழ்ப்பாணம்.**
**021-222-3725, 021-222-6253, 021-221-4966**
**தொலைநகல்: 021-222-9971 மின்னஞ்சல்: rdhsjaffna15@gmail .com**

# நியூயோர்க் சென்றடைந்தார் ரணில்



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 78 ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி அமெரிக்காவின் நியூயோர்க் நகரைச் சென்றடைந்தார்.

கியூபாவில் நடைபெற்ற "ஜி77 + சீனா" அரச தலைவர்கள் உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட பின்னர், அமெரிக்காவில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை நியூயோர்க் நகரைச் சென்றடைந்தார். (நி)

# ஜோர்தான் செல்லும் தொழிலாளர்களுக்கு காப்புறுதி

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவிப்பு

(கொழும்பு)

வீட்டு வேலைக்காக ஜோர்தான் செல்லும் தொழிலாளர்களுக்காக புதிய காப்புறுதிக் கொள்கையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இதன் கீழ் பணி ஒப்பந்த காலத்தில், குறித்த தொழிலாளர் உயிரிழந்தால் அல்லது அவசர விபத்துக்களால் நிரந்தர ஊனமுற்றால் இழப்பீடு வழங்கப்படும்.

இது தவிர மருத்துவ சிகிச்சை, அறுவை சிகிச்சை மற்றும் கொவிட் போன்ற தொற்றுநோய்களுக்கும் இந்த காப்புறுதி மூலம் இழப்பீடு வழங்கப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# இராசிபலன்

18.09.2023
புரட்டாதி 01 , திங்கட்கிழமை
திருதியை முன்னிரவு 11.25 மணிவரை
சித்திரை முற்பகல் 11.51 மணிவரை

சுபநேரம் -12.03-1.33 மணிவரை
இராகுகாலம்-07.33 -9.03 மணிவரை
விநாயகர் சதுர்த்தி விரதம்
சித்தாமிர்தம்

சந்திராஷ்டமம்- உத்தரட்டாதி,ரேவதி

வளவன்

**மேஷம்**
நண்பர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவீர்கள் , உறவினர்கள் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், உடல்நலம் சீராகும் , வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**ரிஷபம்**
குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்,செய்தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில்கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**மிதுனம்**
அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்,பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், நன்மைகள் நாடி வரும் நாள்.

**கடகம்**
பெற்றோர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்,தேவைகள் பூர்த்தியாகும் நாள்,எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**சிம்மம்**
ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கன்னி**
குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும், வாக்கு மேன்மையுண்டு, வங்கி சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும்.

**துலாம்**
தேகநலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும்,தெய்வீகச் சிந்தனை மேலோங்கும் நாள், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

**விருச்சிகம்**
எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்,ஊர் மாற்றம், இடமாற்றம் என்பன இடம்பெறலாம்.

**தனுசு**
தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மகரம்**
செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன நன்மையுண்டு.

**கும்பம்**
நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**மீனம்**
குடும்பத்தில் சிறு சிறு வாக்குவாதம் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், தொழில் ரீதியான பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், விரயங்கள் மேலோங்கும் நாள்.

குடும்பம் இயற்கையின் சாதனைகளில் ஒன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவிண்டில் பகுதியில் வீடு உடைத்து பணம் திருட்டு

(கரணவாய்)

நவிண்டில் பகுதியில் வீடு உடைத்து ரூ.15 ஆயிரம் பணம் களவு போன சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருகையில் கடந்த திங்கட்கிழமை மதிய உணவு சாப்பிடுவதற்காக அரச பெண் உத்தியோகத்தர் வீட்டிற்கு வந்த பொழுது வீட்டினுடைய உட்கதவு உடைக்கப்பட்ட நிலையில் இருந்ததை அவதானித்தவுடன் திருடன் திருடன் என சத்தமிட்டவேளை உள் இருந்து வெளியே வந்த திருடர்கள் இருவரும் அவரை தள்ளிவிட்டு தப்பித்துச் சென்றுள்ளனர்.

இதன் பிறகு உள்ளே சென்று பார்த்த வேளை அலுமாரியில் இருந்த பதினஐயாயிரம் ரூபா பணம் களவு போனதையடுத்து குறித்த சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்ததையடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.(நி-6-60)

# விநாயகர் சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் விநாயகர் சதுர்த்தி உற்சவம் இன்று திங்கட் கிழமை இடம்பெறவுள்ளது.

மாலை 4 மணிக்கு ஸ்நபன அபிஷேகம், மூல மூர்த்தி பூஜை, வசந்த மண்டப பூஜை என்பன இடம்பெற்று விநாயப் பெருமான் உள்வீதி, வெளிவீதி வலம் வரும் காட்சி இடம் பெறும் என ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ச.விவேகானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார். (நி-6)





வலிகாமம் மேற்கு பிரதேச சபையும் கொற்கைத்துறை இந்து மயான அபிவிருத்திச் சங்கம் மற்றும் புலம்பெயர் உறவுகளின் பங்களிப்புடன் வட்டுக்கோட்டை கொற்கைத்துறை (கொத்தன் துறை) இந்து மயானத்தையும் பற்றைகளாக இருந்த மயான வீதியினை துப்புரவுபடுத்தல் பணியும் அண்மையில் முன்னெடுக்கப்பட்டன.

# யோகக்கலை கற்கைநெறி நல்லூரில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டிற்காக இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகக்கலை அடிப்படை கற்கை நெறியின் புதிய பிரிவு நல்லூர்க் கந்தன் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணி முதல் காலை 8 மணிவரை நடைபெறும் இவ்வகுப்புகளில் ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்து கொள்ள முடியும்.

மூன்று மாத காலங்களுக்குள் குறித்த கற்கைநெறியை முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

மேலதிக தகவல்களுக்கு 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் ம. பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார். (நி-6)

# பெற்றோல் குண்டு வீச்சு; சந்தேக நபர்கள் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுன்னாகம் தாவடி பிரதேசத்தில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்து பெற்றோல் குண்டுத் தாக்குதலை நடத்தி 5 பேர் காயமடைந்த சம்பவம் தொடர்பாக மூன்று நபர்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெற்றோல் குண்டு தாக்குதல் காரணமாக வீட்டுக்குள் இருந்த குடும்ப உறுப்பினர்கள் ஐவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)




**நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு சேவ் எ லைப் அமைப்பினால் சப்பறம், தேர், தீர்த்தம் மற்றும் பூங்காவனம் ஆகிய 4 திருவிழா நாட்களில் யாழ்.மாநகர சுகாதார வைத்திய பணிமனையில் இரத்த தான முகாம் நடைபெற்றது. குறித்த முகாமில் 120 தன்னார்வ கொடையாளர்கள் இரத்ததானம் வழங்கியுள்ளனர்.**

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2915

Search for people, places and things

**தசாங்கன்**

மலையை காக்க மலையின் மீது கோயில்
மரத்தைக் காக்க மரத்தடியில் கோயில்
குளத்தை காக்க குளத்தினுள் கோவில்
இல்லைனா இந்நேரம் எல்லாத்தையும்
ஆட்டைய போட்டிருப்பானுங்க...



**சதுரங்கன்**

கணவர்:செல்லம் சப்பாத்தி சூப்பரா
செஞ்சிருக்கடி.நல்லாருக்குன்னு தானே
சொல்றேன் அப்புறம் ஏன் முறைக்கிற.
மனைவி- அது தோசை....



**மைத்திலி**

சார் உங்க வீட்டுல கரண்ட் இருக்கா
பக்கத்து வீட்டுக்காரன்:இல்லை
நல்லவேளை நான் கூட எங்க வீட்டுல மட்டும் தான்
இல்லையோன்னு நினைச்சேன்...



**வருணப்பிரியன்**




**மாலினி**

சார்... உங்களோட பேசப் பிடிக்கலைன்னா
விட்ற வேண்டியது தானே... எதுக்கு ஓயாமல்
போன் பன்றீங்க...




**யுவதேகி**

கடவுள்- உன் தவத்தை மெச்சினேன்.
ஏதாவது 2 வரம் கேள்.
பக்தன்- நான் தூங்கும் போது சாக வேண்டும்
கடவுள்-ஆகட்டும், மற்றொருவரம்?
பக்தன்- எனக்கு தூக்கமே வரக் கூடாது...
கடவுள்-!!!




**நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய மீனவர்களை விடுவிக்கக் கோரி ராமேஸ்வரம் மீனவர்கள் பணிப்புறக்கணிப்பு

(சென்னை)

இலங்கையில் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 8 பேரை விடுவிக்கக் கோரி ராமேஸ்வரம் மீனவர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த போராட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றதாகவும் இதன் காரணமாக 800 மீன்பிடி படகுகள் ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் நிறுத்தப்படிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படையினர் கடந்த புதன்கிழமை இரவு எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 17 மீனவர்களை கைது செய்ததோடு அவர்களிடம் இருந்து மூன்று மீன்பிடி படகுகளை இலங்கை கடற்படையினர் கைப்பற்றியிருந்தனர்.

இந்நிலையில் குறித்த மீனவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து, எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ஒரு வருடத்திற்காவது சமுர்த்தி வழங்கப்பட வேண்டும்

### நாமல் வலியுறுத்து

(கொழும்பு)

இன்னும் ஒரு வருடத்திற்காவது சமுர்த்தி வழங்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ரன்ன பிரதேசத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுகளை வழங்கவுள்ளோம்.

அத்தோடு பொதுஜன பெரமுனவுடன் இணைந்துள்ள ஏனைய கட்சிகளின் கருத்துக்களும் இந்த முன்மொழிவுத் தொடரை வகுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை, இன்னும் ஒரு வருடத்திற்காவது சமுர்த்தி வழங்கப்பட வேண்டும். நிவாரணத் தொகையை அவசரமாக நடைமுறைப்படுத்துவதால் சில அநீதிகள் ஏற்படுவதோடு சிலர் அவதியுறுவார்கள் என அவர் தெரிவித்தார். (நி)

## கட்டுப்பாட்டை இழந்த மு.சக்கரவண்டி மின்கம்பத்துடன் மோதி விபத்து

### நால்வர் காயம்



(முறிகண்டி)

யாழ்ப்பாணம் நாவற்குழி பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 2 குழந்தைகள் உட்பட நால்வர் காயமடைந்துள்ளனர்.

குறித்த விபத்து நேற்று பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. யாழிலிருந்து பூநகரி நோக்கி பயணித்த முச்சக்கர வண்டி கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது, முச்சக்கர வண்டியில் பயணித்த சாரதி, 2 குழந்தைகள் மற்றும் குழந்தைகளின் தாயாரும் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் பொது மக்களின் உதவியுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த நால்வரும் கிளிநொச்சி - பூநகரி - 4 ஆம் கட்டை பகுதியை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிக காற்று கட்டுப்பாட்டை இழக்க செய்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த வீதியில் பயணிப்பவர்கள் மிகுந்த அவதானமாக பயணிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-6)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்:அவிட்டம்
கி.பா: 48
உயரம்: 5' 7
தகைமை/தொழில்: BSc, Bcom, BBA கணக்காளர்/வரி ஆலோசகர்
எதிர்பார்ப்பு: A/L படித்த பெண்
தொ.இ: B/13940

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பூசம்
உயரம்: 5' 9
தகைமை/தொழில்: MSc in cyber security Network System engineer
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: B/13941

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம் : சித்திரை
கி.பா: 15 3/4
உயரம்: 6
தகைமை/தொழில்: BSc, MEd ஆசிரியர் (அரச)
எதிர்பார்ப்பு: படித்த மணமகள்
தொ.இ: B/13942

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 29
உயரம் : 5' 7
தகைமை/ தொழில்: MBA in Finance வங்கியாளர்
எதிர்பார்ப்பு: உயர் பதவி, வெளிநாடு, உள்நாடு
தொ.இ: B/13944

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்:ரேவதி
உயரம்: 5' 3
தகைமை/தொழில்: BSc (Hons) Tralent Acquisition Specialist
எதிர்பார்ப்பு: உயர் பதவி/ பட்டதாரிகள்
தொ.இ:G/13922

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 47 3/4
உயரம்: 5' 7
தகைமை/தொழில்:Diploma in IT Digital marketing Excective
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/13924

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 7 3/4
உயரம்: 5' 6
தகைமை/தொழில்: Diploma in management சொந்த வியாபாரம்
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ:G/13925

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்:பரணி
கி.பா: 28 1/2
உயரம் : 5' 3
தகைமை/தொழில்: BA Planning Special
எதிர்பார்ப்பு: அரச, உயர் தொழில்
தொ.இ:G/13927

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## ஒரு வருடத்திற்கு முன்னதாக பட்டம் பெற ஏற்பாடு

### கல்விக்காலத்தை குறைக்கத் திட்டம்

(கொழும்பு)

ஒரு வருடத்திற்கு முன்னதாகவே மாணவர்கள் பட்டம் பெறக்கூடிய வகையில் கல்விக் காலத்தை ஒரு வருடத்தால் குறைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

அண்மையில் விசாகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சமீப காலமாக நாடு மிகவும் கடினமான காலகட்டத்தை எதிர்கொண்டது. தற்போது அந்த நெருக்கடியில் இருந்து மீண்டு வருகிறோம்.

அறிவை வழங்கும் துறைகளை விரிவுபடுத்துவதற்கான வலுவான அர்ப்பணிப்புடன் புதிய துறைகள் உருவாகியுள்ளன. அவற்றில் எந்த தனிநபரும் சேரலாம்.

பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் உட்பட எல்லோருக்கும் தேர்வுகள் நடத்தப்பட வேண்டும். முடிவுகளைப் பெற வேண்டும். மற்றும் உயர்கல்விக்கான கதவுகளைத் திறக்க வேண்டும்.

அத்துடன் இந்த செயற்பாட்டை உறுதியுடன் செயற்படுத்த அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது எனத் தெரிவித்தார். (நி)

## லஞ்சம் மற்றும் ஊழல் நாட்டில் அதிகரிப்பு

### மத்திய வங்கி அறிக்கை

(கொழும்பு)

இலஞ்சம் மற்றும் ஊழல் என்பது இப்போது நாட்டில் குற்றவியல் வருமானத்தை உருவாக்கும் இரண்டாவது மிக முக்கியமான சட்டவிரோத நடவடிக்கையாக மாறியுள்ளது.

இந்த செயற்பாடு, 2014 இல் ஐந்தாவது இடத்தில் இருந்த நிலையில் தற்போது மூன்று இடங்களால் முன்னோக்கி வந்துள்ளதாக மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வாரம் வெளியிடப்பட்ட தேசிய பணமோசடி மற்றும் பயங்கரவாத நிதியளிப்பு அபாய மதிப்பீட்டு அறிக்கையில் நிதிப் புலனாய்வுப் பிரிவு இதனை வெளிப்படுத்தியுள்ளது.

அதிகமான சம்பவங்கள் முறைப்பாடுகளாக பதிவாகியிருந்தாலும் பின்னர் மேற்கொள்ளப்பட்ட சோதனைகள் மற்றும் விசாரணைகள் மூலம் குறைவான எண்ணிக்கையிலான வழக்குகளே பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில் குற்றவியல் வருமானத்தை உருவாக்கும் முதல் சட்டவிரோத செயற்பாடுகளாக போதைப் பொருள் மற்றும் சுங்கம் தொடர்பான குற்றங்கள் கண்டறியப்பட்டுள்ளன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம்

# தொழிலில் நேர்த்தி

ஒரு நகை வியாபாரியின் மறைவுக்குப் பிறகு அவரது குடும்பம் மிகவும் மோசமான துன்பத்திற்கு உள்ளானது.

அந்த வியாபாரியின் மனைவி தன் மகனை அழைத்து, ஒரு நீலக் கல் பதித்த நெக்லஸை அவனது கையில், கொடுத்துக் கூறினாள் "மகனே, இதை எடுத்துக் கொண்டு உன் மாமாவின் கடைக்குச் செல்.

அவரிடம், இதை விற்று நமக்குக் கொஞ்சம் பணம் தரும்படி கேள்" என்றாள்.

மகன் அந்த நெக்லஸை எடுத்துக் கொண்டு, அவனது மாமாவின் கடையை அடைந்தான்.

அவனது மாமா அந்த நெக்லஸை முற்றிலுமாகப் பார்த்தார். அவனிடம் கூறினார்-

"என் அன்பு மருமகனே, உன் அம்மாவிடம் கூறு..! அதாவது இப்போது மார்க்கெட் மிகவும் மோசமாக இருக்கிறது. கொஞ்ச நாள் கழித்து இதை விற்றால், அவளுக்கு நல்ல விலை கிடைக்கும்" என்று.

பின் குடும்ப செலவுக்காக அவர் அவனிடம் கொஞ்சம் பணத்தைக் கொடுத்தார்.

மேலும் "நாளை முதல் கடைக்கு வந்து என்னுடன் உட்கார்ந்து வேலையை கற்றுக் கொள்" என்றார்.

எனவே, அடுத்த நாள் முதல், அந்தப் பையனும் தினமும் கடைக்குப் போகத் தொடங்கினான்.

அங்கே தொழிலைக் கற்றுக் கொள்ளத் தொடங்கினான்.எப்படி வைரம் மற்றும் கற்களை பரிசோதிக்க வேண்டும்? என்பதையும் தெரிந்து கொண்டான்.

விரைவிலேயே, அவன் தொழிலில்,ஒரு சிறந்த அறிவாளியாக மாறினான்.

நெடுந்தொலைவில் இருந்தும் கூட, மக்கள், இவனிடம் வைரத்தைப் பரிசோதிப்பதற்காக வந்தார்கள்.

ஒரு நாள் அவனது மாமா கூறினார்...

"மருமகனே, அந்த நெக்லஸை உன் அம்மாவிடம் இருந்து இப்போது வாங்கி வா! மார்க்கெட் நிலைமை இப்போது நன்றாக இருக்கிறது."

அம்மாவிடம் இருந்து நெக்லஸை பெற்றவுடன், அந்த வாலிபன், அவனாகவே அதனைப் பரிசோதித்தான். அது ஒரு போலி என்பதைக் கண்டுபிடித்தான்.

அவனுடைய மாமா, ஒரு சிறந்த வல்லுநராக இருந்தும், இதை ஏன் நம்மிடம் தெரிவிக்கவில்லை? என்று அவன் ஆச்சரியம் அடைந்தான்.

நெக்லஸை வீட்டில் விட்டு, விட்டு அவன் கடைக்குத் திரும்பினான்.

அவன் கூறினான், "மாமா இது போலியானது. ஆனால், இதை என்னிடமிருந்து நீங்கள் ஏன் மறைத்தீர்கள்..?"

அவனது மாமா கூறினார்... "நீ முதன் முதலில் நெக்லஸை என்னிடம் கொண்டு வந்த போது, அது போலியானது என்று நான் உன்னிடம் கூறியிருந்தால், நான் வேண்டுமென்றே இதைக் கூறுவதாக நீ நினைத்துக் கொள்ளக் கூடும். ஏனென்றால், அப்போது நீ ஒரு கஷ்டமான சூழ்நிலையில் இருந்தாய்."

"இன்று நீ, நீயாகவே இதைப் பற்றிய அறிவை பெற்றிருப்பதால், இந்த நெக்லஸ், உண்மையிலேயே போலியானது என்பதை அறிந்துகொண்டாய்."

"அந்த நேரத்தில், உண்மையைக் கூற வேண்டும் என்பதை விட... உறவை காப்பது மேலானது".

"எந்த விதமான பட்ட அறிவும் இல்லாமலே, நம்முடைய உணர்ச்சிகளுக்கு தக்கவாறு, நாம் இந்த உலகில் பார்ப்பது தவறு என்று கூறுகின்றோம்."

"தவறான புரிதல்கள் நம்முடைய உறவு முறைக்கு, பெரும் பாதிப்பை உண்டாக்கி, முறிவுக்கு இட்டுச் செல்கிறது."

# கடல் ஆய்வில் கலக்கப் போகும் சமுத்ரயான்



(டில்லி)

உலக நாடுகளை திரும்பி பார்க்கச் செய்யும் மற்றொரு ஆய்வுக்கு தயாராகி வருகிறது இந்தியா.இந்த முறை கடல் வளங்களை ஆய்வு செய்வதற்காக "மத்ஸ்யா 6000" என்ற நீர்மூழ்கி ஆய்வு வாகனத்தை சுமார் 6 கிலோ மீற்றர் ஆழத்திற்கு அனுப்பும் சமுத்ரயான் திட்டத்தை செயற்படுத்த உள்ளது. இந்த வாகனத்தில் மூன்று ஆய்வாளர்கள் அனுப்பப்பட உள்ளனர்.

"மத்ஸ்யா 6000" வாகனத்தை புவி அறிவியல் அமைச்சகத்தின் கீழ் உள்ள சென்னை தேசிய கடல் தொழில் நுட்ப நிறுவனம் (என்ஐஓடி) வடிவமைத்து உருவாக்கி உள்ளது. வாகனத்தின் வடிவமைப்பு நிறைவடைந்து, சோதனை செய்யப்பட்டு வருகிறது. ஆழ்கடல் வளங்கள் மற்றும் பல்லுயிர் மதிப்பீட்டை ஆராய்வதற்காக கடலுக்கடியில் தோண்டக்கூடிய சுரங்க இயந்திரம் மற்றும் ஆளில்லா வாகனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சமுத்ரயான் திட்டப் பணிகள் மற்றும் ஆய்வு கலனை, மத்திய புவி அறிவியல் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு சமீபத்தில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதுதொடர்பான புகைப்படங்களையும் அவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருந்தார். அதில் அவர் கூறியிருப்பதாவது, அடுத்து சமுத்ரயான் திட்டம். இது "மத்ஸ்யா 6000" நீர்மூழ்கிக் கலன். சென்னையில் உள்ள தேசிய கடல் தொழில்நுட்ப நிறுவனத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. ஆழ்கடல் வளங்கள் மற்றும் பல்லுயிர் மதிப்பீட்டை ஆய்வு செய்வதற்காக, 6 கி.மீ கடல் ஆழத்திற்கு 3 மனிதர்களை இந்த நீர்மூழ்கி வாகனத்தில் அனுப்ப திட்டமிடப்பட்டுள்ளது. ஆழ்கடல் ஆய்வுக்கு மனிதர்களை அனுப்பும் இந்தியாவின் முதல் திட்டம் இதுவாகும். இந்த திட்டம் கடல் சூழலை சீர்குலைக்காது. இந்த திட்டம் பிரதமரின் நீலப் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவாக இருக்கும்" என்று தெரிவித்தார். (நி-6)

# ரஷ்யாவின் ஏவுகணை தயாரிப்பை பார்வையிட்டார் கிம் ஜாங் உன்



(மொஸ்கோ)

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன், ரஷ்யாவுக்கு சென்றுள்ள நிலையில் அங்குள்ள போர் விமான ஆலையை பார்வையிட்டார். அதேபோல் ஏவுகணை தயாரிப்பையும் பார்வையிட்டார்.

அவர், ரஷ்யாவில் தொடர்ந்து அந்நாட்டின் ஆயுத திறனை பார்வையிட்டு வருவதாக பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது. இதனால் வடகொரியாவின் அணு ஆயுத தாக்குதல் திறனை அதிகரிக்கக் கூடிய ஒப்பந்தத்தை இரு நாடுகளும் மேற்கொள்ளக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நேற்று முன்தினம் ரஷ்யாவின் பசுபிக் கடற்படை பிரிவில் அணு ஆயுதத் தாக்குதல் நடத்தும் திறன் கொண்ட குண்டு வீச்சு விமானங்கள், ஹைப்பர் சோனிக் ஏவுகணைகள், அதிநவீன போர்க் கப்பல் ஆகியவற்றை பார்வையிட்டார்.

இந்நிலையில், ரஷ்ய பாதுகாப்பு மந்திரி செர்ஜி ஷோய்குவுடன் கிம் ஜாங் உன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

உக்ரைன் மீது ரஷ்யா போர் நடத்தி வரும் நிலையில் ரஷ்யா-வடகொரியா இடையே ஆயுத ஒப்பந்தம் ஏற்பட்டால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று அமெரிக்கா எச்சரித்து உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# பிரேசிலில் விமான விபத்து 14 பேர் உயிரிழப்பு



(பிரேசிலியா)

பிரேசிலின் அமேசான் மாநிலத்தின் பார்சிலோஸ் பகுதியில் இடம்பெற்ற விமான விபத்தில் 14 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விபத்தானது நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.இந்த விமானத்தில் 12 சுற்றுலா பயணிகளும் விமானி மற்றும் துணை விமானியும் இருந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொழுதுபோக்கிற்காக மீன் பிடிப்பதற்காக அந்த இடத்திற்குச் சென்று கொண்டிருந்த போது மோசமான வானிலை காரணமாக விபத்து ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (நி)

# துருக்கி ஜ...
## ஆலோசகர்க...
### துருக்கி அர...



(துருக்கி)

துருக்கியில் 2014 ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதி தாயீப் எர்டோகன் தலைமையிலான ஆட்சி நடைபெற்று வருகிறது. இவர் கடந்த ஜூன் மாதம் நடந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## குவியல் குவியலாக புதைக்கப்படும் சடலங்கள்! கதறி அழக் கூட லிபியாவில் ஆளில்லாத துயரம்!

**(லிபியா)**

**கடந்த வாரம் லிபியாவை தாக்கிய புயலால் மீட்கப்பட்ட உடல்கள் கனரக வாகனங்களின் உதவியோடு குவியல் குவியலாக புதைக்கப்படுகின்றன. குடும்பம் குடும்பமாக மக்கள் உயிரிழந்துள்ளனர்.10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் மாயமாகியுள்ளனர். அவர்களின் கதி என்னவானது என்று இதுவரை தெரியவில்லை.**

லிபியாவின் கிழக்கு பகுதியை கடந்த ஞாயிற்றுக் கிழமை தாக்கிய டேனியல் புயலால் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

டேனியல் புயல் அதனால் ஏற்பட்ட கடும் மழை காரணமாக அங்குள்ள இரண்டு அணைகள் இடிந்து விழுந்தன.

இதனால் அணையில் இருந்த தண்ணீர் டெர்னா நகரை மூழ்கடித்தது. இரவு நேரத்தில் இந்த சம்பவம் நடந்ததால் உறக்கத்தில் இருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் வெள்ளத்துடன் அடித்து செல்லப்பட்டனர்.

கட்டடங்கள் வீழ்ந்தன. பல அடி உயரத்துக்கு வெள்ள நீர் ஆறுபோல் ஊருக்குள் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் டெர்னா நகரமே சின்னாபின்னமாகியுள்ளது.

வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட பகுதிகளில் சடலங்கள் சிதறி காணப்படுகின்றன.

துறைமுக நகரில் மட்டும் 20 ஆயிரம் பேர் உயிரிழந்திருக்கலாம் என டெர்னா மேயர் அப்துல் மோனெம் அல்கைதி அச்சம் தெரிவித்துள்ளார். இதுவரை மீட்கப்பட்ட 11 ஆயிரம் பேரின் சடலங்கள் கனரக வாகனங்களின் உதவியுடன் குவியல் குவியலாக புதைக்கப்படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (நி)

## சுமார் 70 கோடி மக்களுக்கு ஒருவேளை உணவு கிடைப்பது அரிது

### உலக உணவுத் திட்டம் அறிக்கை

(ஜெனீவா)

உலகளாவிய ரீதியில் பசி, பட்டினி காரணமாக சுமார் 70 கோடி மக்களுக்கு அடுத்த வேளை உணவு எப்போது கிடைக்கும் அல்லது அடுத்த வேளை உணவினை சாப்பிடுவோமா என்பதே தெரியாது என ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத்திட்ட செயற்றிட்ட பணிப்பாளர் சீன்டிங் மைக்னர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபை கூட்டத்தில் இணைய வழியில் கலந்துரையாடும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

நிதிப் பற்றாக்குறை காரணமாக ஏழை மக்களுக்கு வழங்கப்படும் இலவச தானியங்கள் குறைக்கப்படுகின்றன.இந்த நிலைமை அதிகரித்துக் கொண்டே போகின்றது.

தொடர்ச்சியான மற்றும் நீண்ட கால நெருக்கடிகளால் உலகளாவிய மனிதாபிமான தேவைகளை தொடர்ச்சியாக குறைத்துக் கொண்டு இருக்கும் சூழ்நிலையாக இருக்கின்றது.

உரோம் நகரை மையமாகக் கொண்டு இயங்கும் நிறுவனம் ஒன்று 79 நாடுகளில் நடத்தப்பட்ட உலக உணவுத்திட்ட மதிப்பீட்டின்படி 78.3 கோடி மக்கள் உலக மக்கள் தொகையில் 10 பேரில் ஒருவர் ஒவ்வொரு இரவும் பசியோடு தான் உறங்கச் செல்கின்றார்கள்.

இந்த ஆண்டில் 34.5 கோடிக்கும் அதிகமான மக்கள் அதிகளவு உணவு பாதுகாப்பு இன்மையை எதிர்கொள்கின்றனர்.

இது கொரோனா தொற்றுக்கு முன்னர் 2021 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து கிட்டத்தட்ட 20 கோடி மக்களாக இருந்தது என அந் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந் நிலைமை ஆண்டுதோறும் அதிகரிக்க போர், பொருளாதார பாதிப்பு மற்றும் பருவநிலை பாதிப்பும் பெரும் பங்காற்றுகின்றன என தெரிவித்தார். (நி-6)

## ஜனாதிபதியின் சிறப்பு ...ர்கள் 15 பேர் ராஜினாமா

### அரசியல் வட்டாரத்தில் பரபரப்பு



தேர்தலில் போட்டியிட்டு மூன்றாவது முறையாக ஜனாதிபதியாக பொறுப்பேற்றார்.

இதனையடுத்து அங்கு புதிய அமைச்சரவை அறிவிக்கப்பட்டது. இதற்கு முன்பு மந்திரி பதவி வகிக்காத 90 சதவீதம் பேருக்கு இந்த முறை புதிதாக பொறுப்பு வழங்கப்பட்டது.

இதனால் முந்தைய அமைச்சரவையில் இருந்த பலரும் தற்போது ஜனாதிபதி சிறப்பு ஆலோசகர்களாக இருந்து வருகின்றனர்.

எனினும் அமைச்சரவையில் பதவி வழங்காததால் அவர்கள் அதிருப்தியில் இருந்து வந்தனர்.

இந்தநிலையில் அங்கு ஜனாதிபதி தாயீப் எர்டோகனின் ஆலோசகர்கள் 15 பேர் தங்களது பதவியை ராஜினாமா செய்துள்ளதாக அங்குள்ள ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இது துருக்கி அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. (நி)

## உக்ரைன் ஜனாதிபதி உள்ளிட்டோரின் சொத்துக்களை ஏலம் விட ரஷ்யா முடிவு

(மொஸ்கோ)

உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி உட்பட நூற்றுக்கணக்கான உக்ரைனியர்களுக்கு சொந்தமாக கிரிமியாவில் உள்ள சொத்துக்களை விற்கப்போவதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

அவற்றில் கிரிமியா தன்னாட்சிக் குடியரசிலுள்ள 100 சொத்துக்களை விற்க திட்டமிட்டு வருவதாக ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய, கிரிமியாவிலுள்ள, தேசிய மயமாக்கப்பட்டுள்ள சொத்துக்களை விரைவில் விற்பனை செய்ய இருப்பதாக கிரிமியாவின் பாராளுமன்ற சபாநாயகர் தெரிவித்துள்ளார்.



2014 ஆம் ஆண்டு ரஷ்ய படைகள் கிரிமியா தீபகற்பத்தை கைப்பற்றியுள்ள நிலையில், ரஷ்ய அதிகாரிகள் அங்கு தேர்தல் நடத்தி அரசை நிர்வகித்து வருகின்றனர்.

உக்ரைன் நாட்டு அரசியல் தலைவர்களுக்கும் தொழிலதிபர்களுக்கும் சொந்தமான 500 சொத்துக்களை தேசிய மயமாக்கிய ரஷ்ய அதிகாரிகள், 815 மில்லியன் ரூபிள் மதிப்பிலான சொத்துக்களை ஏலம் விடப்போவதாக அறிவித்துள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## நீரிழிவு நோயிற்கு உணவுப் பழக்கவழக்கமும் மூலிகைப் பாவனையும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**இழிவறிந்து உண்பான் கண் இன்பன் போல்
நிற்கும் கழிபேநிரை யான் கண் நோய்**

திருக்குறளிற்கமைய குறைந்தளவு உண்பவனிடத்தில் இன்பம் நிற்பது போல அளவுக்கதிகமாக உண்பவனிடத்தில் நோய் நிற்கும். நீரிழிவு நோயிற்கு நாம் இலக்காவோமாகில் வாழ்நாட்கள் முழுவதும் இந்நோயுடன் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். இதில்உணவுப்பழக்கவழக்கம் முக்கிய இடத் தைப் பெறுவதாக அமைகிறது.

நீரிழிவு நோயாளர்களின் சதையி இன்சுலின் சுரப்பதை முற்



றாக நிறுத்தி விடுகிறது. அல்லது குறைவாகச் சுரக்கிறது. சில வேளைகளில் சுரக்கப்பட்ட இன்சுலின் சரியாக தொழிற்படாவிடின் நீரிழிவு ஏற்பட வாய்ப்பாகலாம். அவர்களில் இரத்தத்தில் குளுக்கோஸ் மேலதிகமாகவே காணப்படும். அதுவும் உணவு அருந்திய பின்னர் குளுக்கோஸின் அளவு அபரிமிதமாகக் காணப்படும்.


நீரிழிவு நோயாளர்கள் தாவர உணவுகளை எதுவித கட்டுப்பாடுமின்றி உண்ணலாம். கிழங்கு வகைகளை தவிர்க்க வேண்டும். கருணைக்கிழங்கு மட்டும் எடுக்கலாம். கட்டுப்பாடின்றி எடுக்கக் கூடியவை பாகற்காய், வாழைப்பூ, கீரை வகை கள், கரட், போஞ்சி,கெண்டி,புடோல், தக்காளி, கத்தரி, முள்ளங்கி, கெக்கரிக்காய், தாமரைக் கிழங்கு, சுரைக்காய், கோகிலாக் கிழங்கு, முருங்கை பிஞ்சு, பனியவரை, சிறகவரை, பீர்க்கு, குருவிச்சைப்பாகல்,பப்பாசிப்பிஞ்சு,பூசணி, நோக்கோலி, அம்பிரலங்காய் என்பனவாகும்.

சில வகையான உணவுகளை நிச்சயமாக அளவாக உண்ண வேண்டும். அவையாவன, சிவப்பு அரிசிச்சோறு, அரிசிமா, குரக் கன்மா, சோயாமாவினால் செய்த உணவுகள், கோதுமைமா, அல்லது ஆட்டாமாவினால் செய்தவைகளை விட உகந்தவையாகும்.

சமைத்த பருப்பு, கடலைப்பயறு, ஈரப்பலா, வத்தாளைக்கிழங்கு முதலியவற்றை அளவாக உண் ணலாம். அளவாக எடுக்கக்கூடிய பழவகைகள் நன்றாகக் கனியாத வாழைப்பழம், ஒரு துண்டு பப்பாசிப்பழம், முற்றிய ஜம்புக்காய் போன்றனவாம். சீனி சேர்க்காத பழச்சாறு ஆடை நீக்கிய பசுவின் பால்.

உப்புக் சுவடிய உணவுகளை தவிர்க்க வேண்டும். அவையாவன, மார்மைற், கருவாடு, உப்பு பிஸ்கட், உப்பு சேர்க்கப்பட்ட கடலை, முந்திரிகைப் பருப்பு (கஜு) மாமிச உணவுகளில் சிறிது மீன் வகைகளை உண்பது நல்லது. பொரித்த மீன் வகைகள் உண்பது தவிர்க்கப்படல் வேண்டும்.

கோழி இறைச்சி உண்ண விரும்பின் அளவாக சமைப்பதற்கு முன் அதன் தோலை அகற்றவும். ஆடு, மாடு, பன்றி இறைச்சி வகைகள் தவிர்க்கப்படல் வேண்டும். முட்டை மஞ்சள் கருவில் அதிகளவு கொலஸ்ரோல் இருப்பதனால் அவற்றை குறைத்துக்கொள்ளவேண்டும்.



நீரிழிவு உடையோர் தவிர்க்க வேண்டியவை, சீனி, பனங்கட்டி, சர்க்கரை, பாணி, ரின்பால், ஐஸ்கிறீம், ஜாம், ஜெலி, கேக், புடிங், இனிப்பு, கிறீம் பிஸ்கட், சொக்லேட், குளிர்பானங்கள், இனிப்பு பலகாரம் முதலியன.

சித்த மருத்துவத்தில் தூயதேன், பேரீச்சம்பழம் அளவாக பயன்படுத்த சிபாரிசு செய்யப்படுகிறது.

இவற்றில் காணப்படும் சீனிச் சத்தானது. Levalase நிலையில் இருப்பதால் சாதாரண குளுக் கோஸை விட 1/8 பங்கு குறைவாகவே அகத்துறிஞ்சப்படுகிறது.

அத்துடன் அவற்றில் இருக்கும் இரும்புச்சத் து மற்றும் உயிர்ச்சத்துக்கள், கனியுப்புக்கள் போன்றன நீரிழிவு நோயாளிக்கு நோய் எதிர்ப்பாற்றலையும் அதிகரிக்கச் செய்யும்.

தேநீர், கோப்பி அருந்தும் போது சீனி, சர்க்கரை சேர்ப்பதை தவிர்க்க வேண் டும். ஆவாரம் பஞ்சாங்கம் தேநீர், நாவல் கோப்பி போன்றன சிறந்தவை.

நார்த்தன்மையான உணவுகளுக்கு முக்கியத் துவம் கொடுக்க வேண்டும். உதாரணமாக சாமை, தினை, வரகு, குரக்கன், ஒடியல் போன்றவற்றை குறிப்பிடலாம். நார்த்தன்மை அதிகமாக உள்ள உணவுகள் சமிபாட்டையும் அகத்துறிஞ்சுதலையும் தாமதமாக்குவதால் குரு தியில் குளுக்கோஸ் அளவு திடீரென அதிகரிப்பதை [illegible]

அமைந்து வருகிறது.

எள்ளும் அதியுயர் உணவாகும். எள்ளில் காணப்படும் கொழுப்பானது உறையாத தன்மையுடைய அதியுயர் கொழுப்பாகும் (Unsturated Fat). எனவே தான் இதில் தயாரிக்கும் சகல உணவுகளும் (எள்ளுருண்டை, எள்ளுப் புண்ணாக்கு) சிறந்தவையாக அமைகின்றன.

இதில் உயிர்ச்சத்து A க்கு முன்னோடியான கரோட்டீன் போதியளவு காணப்படுகிறது. அத்துடன் தயமின் 1010 மைக்ரோகிராம் உண்டு. எள்ளுப் புண்ணாக்குத் துப்பரவானதாக தயாரிக்கப்படல் வேண்டும்.



எள்ளை நன்றாகக் கழுவிக் காயவைக்க வேண்டும். அதன்பின் துப்பரவானதாகத் துவைக்கப்பட்டு எண்ணெயை பெற்றபின் பெறப்படுவதையே எள்ளு புண்ணாக்கு என்பர். இவ்விதமாக பெறப்பட்டதாக இருப்பின் மக்கள் அதிக சிறந்த உணவாக பயன்படுத்த முடியும். இதில் புரதச் சத்தும் அதிகமாகக் காணப்படும்.

நீரிழிவில் பயன்படும் மூலிகைகளாவன, தேங்காய், ஆவரசு, பொன்னாவரசு, ஆரைக்கீரை, கொவ்வை, சரக்கொன்றை, ஆல், தொட்டாச்சுருங்கி, நிலப்பனை, நாவல், சிறபூனைக்காய், இடம்புரிக்காய், மாங்குருத்து, கடல்ராஞ்சி, சிறுகுறிஞ்சா, அழிஞ்சில், நெல்லி முள்ளி, கடுக்காய், தான்றிக் காய், கறிவேப்பிலை, பலா பழுத்த இலை, குருவத்தலைப் பாகல், பாகல், சிந்தில், மலைவரம்பு, காட்டுக் கொத்தமல்லி போன்ற முக்கியமான மூலிகைகளைக் குறிப்பிடலாம்.

இதில் ஆவரசு, பொன்னாவரசு, சூரைக்கீரை, காட்டுக் கொத்தமல்லி, கொவ்வை இலை, கறிவேப்பிலை போன்றவற்றை இலைக்கீரை வகையாக பயன்படுத்தலாம். பெரிய இன மலை வேம்பின் விதையின் தடித்த பகுதியே தேன் காய் எனப்படும். மிகவும் கசப்பானது.

இத்தேன்காயை வாயிற்கு அருகில் கொண்டு செல்லும் போதே கைப்புச் சுவையை உணரக் சுவடியதாக இருக்கும். இத்தேன்காய்களை உலர்த்தி , பொடித்து 1-2 கிராம் வெந்நீரில்காலை, மாலை எடுக்க இரத்தத்தில் சீனியின் அளவு கட்டுப்படும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமன்னார்-கொழும்பு ரயில்சேவை ஆசன முன்பதிவுகள் செய்ய முடியாத நிலை

## தீர்த்து வைக்குமாறு மக்கள் கோரிக்கை

(மன்னார்)

கொழும்பு கோட்டையில் இருந்து தலைமன்னாருக்கான புகையிரத சேவை சுமார் 9 மாதங்களின் பின் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும் மன்னார் மாவட்டத்தில் இருந்து கொழும்பிற்கு ஆசன முன்பதிவு செய்து பயணம் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பல்வேறு தரப்பினரின் கோரிக்கைகளுக்கு இணங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மடுதிருத்தலத்தில் வைத்து அண்மையில் வழங்கிய வாக்குறுதிக்கு அமைய குறித்த புகையிரத சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிலையில் முதலாம் வகுப்பு குளிரூட்டப்பட்ட ஆசன முன்பதிவு மற்றும் 2 ஆம் வகுப்பு ஆசன முன்பதிவுகளை மேற்கொண்டு மன்னார் மாவட்டத்தில் இருந்து மக்கள் பயணங்களை தொடர முடியும் எனவும் அறிவிக்கப்பட்டது.

எனினும் கொழும்பில் இருந்து தலைமன்னாருக்கு ஆசன முன்பதிவுகளை மேற்கொண்டு மக்கள் பயணங்களை மேற் கொள்கின்ற போதும் தலை மன்னாரில் இருந்து மக்கள் முன்பதிவுகளை மேற்கொண்டு கொழும்பிற்கு செல்ல முடியாத நிலையில் புகையிரத நிலையங்களில் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

தலைமன்னார் தொடக்கம் மடு வரையிலான புகையிரத நிலையங்களில் ஆசன முன் பதிவு செய்யக்கூடிய வசதிகள் இதுவரை இல்லை எனவும் மக்கள் தெரிவித்தனர்.

மேலும் மன்னார் மாவட்டத்தில் உள்ள பிரதான புகை யிரத நிலையங்களில் காணப்பட்ட கணனி வசதிகள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளமையினாலேயே குறித்த முன் பதிவுகளை முன்னெடுக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ் விடயத்தில் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு குறித்த வசதிகளை ஏற்படுத்துமாறு மன்னார் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-285)

# பொலிஸார், இராணுவம் இணைந்து மணல் அகழ்வினைத் தடுக்க வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(தருமபுரம்)

பொலிஸார் மற்றும் இராணுவம் இணைந்து இரண்டு வார காலத்திற்குள் சட்டவிரோத மணல் அகழ்வினை தடுத்து நிறுத்த வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.


சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட செயலக மண்டபத்தில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவர் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது கிளிநொச்சி மாவட்டத்தில் பல பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்ச்சியாக பல பகுதிகளில் நடைபெற்று வருவதன் காரணமாக பல இயற்கை வழங்கல் அழிக்கப்படுவதோடு நெற்செய்கை மேற்கொள்ளப்படும் வயல் நிலங்கள் அழிக்கப்பட்டு வருவதாக பல தரப்பினரால் வழங்கப்பட்ட தகவலுக்கமைவாக குறித்த அறிவிப்பினை அமைச்சர் அறிவித்திருந்தார்.

பொலிஸார் மற்றும் கனியவள திணைக்களகத்தின் ஒருங்கிணைந்த நடவடிக்கையின் ஊடாக கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்ற சட்டவிரோத மணல் கடத்தல்கள் தடுத்து நிறுத்த நடவடிக்கை உடன் மேற்கொள்ளப்பட வேண்டும். குறிப்பாக கல்லாறு, உமையாள்புரம், விளாவோடை, தட்டுவன்கொட்டி, இரணைமடு குளத்தின் கனகராயன் ஆற்றுப்படுகை, பன்னங்கண்டி, செருக்கன், முரசுமோட்டை மற்றும் கண்டாவளை அண்டிய பிரதேசங்களும் ஊரியான், முரசுமோட்டை, பெரியகுளம், கிளாலி உள்ளிட்ட அடையாளம் காணப்பட்ட பிரதேசங்களிலேயே தொடர்ச்சியாக மண் அகழ்வு இடம்பெறுவதாக சுட்டிக்காட்டப்படுகின்ற நிலையில் அதனை தடுத்து நிறுத்த உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என குறித்த கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் முரளிதரன், இராணுவத்தின் 55 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரிமேஜர் ஜெனரல் நனின் ஜெயவர்த்தனா, 551 இராணுவ கட்டளை அதிகாரி யூட் காரியகருவன, விசேட அதிரடிப்படையின் கிளிநொச்சி கட்டளை அதிகாரி, பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் அரசாங்க அதிகாரிகள், என பலர் கலந்து கொண்டு இருந்தனர். (நி-6-316)

# மணல் அகழ்வில் ஈடுபட்ட உழவு இயந்திரம் பறிமுதல்



(தருமபுரம்)

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாற்றுப்பகுதியில் மணல் அகழ்வு இடம்பெறுவதாக இராணுவத்தினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய நேற்று இராணுவத்தினர் மேற்கொண்ட சோதனையின் போது இரண்டு உழவு இயந்திரங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

அனுமதிப்பத்திரம் இன்றி மணல் அகழ்வில் ஈடுபட்ட உழவு இயந்திரங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் சாரதிகளும் கைது செய்யப்பட்டு தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இச் சம்பவம் தொடர்பாக தருமபுர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 180 | 180 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 180 |
| பச்சைமிளகாய் | 400 | 350 | 400 |
| தக்காளி | 200 | 160 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 |
| கோவா | 180 | 160 | 160 |
| கரட் | 350 | 300 | 300 |
| பூசணி | 80 | 80 | 80 |
| புடோல் | 100 | 100 | 100 |
| வாழைக்காய் | 200 | 200 | 200 |
| சின்ன வெங்காயம் | 280 | 260 | 300 |
| பெரிய வெங்காயம் | 220 | 200 | 150 |
| பாகற்காய் | 450 | 400 | 400 |
| வெண்டக்காய் | 80 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 160 | 160 | 160 |
| பயற்றங்காய் | 300 | 300 | 180 |
| லீக்ஸ் | 160 | 150 | 180 |
| பீற்றூட் | 120 | 140 | 140 |
| கறிமிளகாய் | 300 | 300 | 300 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 80 |
| போஞ்சி | 400 | 400 | 450 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | 100 |
| கீரை - 1 பிடி | 80 | 60 | 60 |
| தேசிக்காய் | 1000 | 800 | 1000 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 |
| இராசவள்ளி | 300 | 400 | 450 |
| வெங்காயப்பூ | 250 | 250 | 250 |
| முள்ளங்கி | 80 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 |
| வல்லாரை | 40 | 30 | 50 |
| ஈரப்பலா | 80 | 80 | 80 |


# மரண அறிவித்தல்

## அமரர்.திரு. சின்னத்துரை நவரத்தினம் (பிரான்ஸ்)

தோற்றம் 11.11.1931 மறைவு 09.09.2023



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் 306 நாவலர் வீதி யாழ்ப்பாணம் மற்றும் 31/1 சங்கிலியன் வீதி (திருவேரகம்) நல்லூரரை வாழ்விடமாகவும், 04 Rue Rabelais 93120 Lacourneuve வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை நவரத்தினம் அவர்கள் 09.09.2023 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் லட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் அமரர் நவரத்தினம் தவமணியின் அருமைக் கணவரும் நந்தகுமார் (வரன்), ஜெயக்குமார் (ஜெயன்), அமிர்தினி (உமா), நந்தினி (உஷா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கௌசலா, குமுதினி (பாமா), சுந்தரராஜா (குஞ்சன்), தர்மகுலசிங்கம் (தம்பி) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை-இராசலட்சுமி, காலஞ்சென்ற அமிர்தலிங்கம்-புவனேஸ்வரி, காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம்-கணேஸ்வதி, காலஞ்சென்ற பஞ்சலிங்கம்-கனகேஸ்வரி, மகேஸ்வரி-காலஞ்சென்ற இரத்தினசிங்கம், காலஞ்சென்றவர்களான பத்மாவதி-லோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கனகாம்பிகை- காலஞ்சென்ற நல்லையா, காலஞ்சென்ற தவராசா-பவளம்மா, செல்வராணி-சிவயோகநாதன், செல்வரத்தினம்-சிவசோதி, செல்வராசா-அனுசியா, சிறிமுருகராசா-சிறிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனனும் நிருசன், நிரோகா, ஜெலானி, ஜெயமினி, ஜெர்ரான் ஆகியோரின் ஆருயிர் அப்பப்பாவும் அமிர்ராஜ் (மது), அம்யுக்தன் (சனு), ஆர்த்திகா, அகிலன், அனோஜன், அம்ரிதா ஆகியோரின் பாசமிகு அம்மப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.09.2023 புதன் 10.00-12.30 வரை 16 Ruelean Allemagne 93430 Villetaneuse நடைபெற்று பின்னர் 13.00-14.00 95 rue marcel Sembat 93430 Villetaneuse என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு

நந்தகுமார் Varan (மகன்) 00447405879351
ஜெயக்குமார் Jeyan (மகன்) 0033612159240
சுந்தராஜா Kunjan (மருமகன்) 00447962118118
தர்மகுலசிங்கம் Thambi (மருமகன்) 0033613905162
மகேஸ்வரி (தங்கை) 0777195944
[illegible] (மருமகன்) 0771500611

தகவல்
ஜெயக்குமார்
நவரத்தினம்.

(17121)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 285





ஆனாலும் அவனுடைய அறிவீனத்தை இந்தப் பெண் எப்படிப் பயன்படுத்திக் கொண்டு விட்டாள். அவனுடைய மனத்தில் எவ்விதம் பொறாமைக் கனலை மூட்டி விட்டாள்? அரை நாழிகை நேரத்தில் அவனைத் துரோகியாக்கி விட்டாளே. பெண்மையின் சக்தி அபாரமானது தான்.

'வந்தியத்தேவா! ஒன்று மட்டும் நீ ஒப்புக் கொள்ளத் தான் வேண்டும். நீ உன்னை வெகு கெட்டிக்காரன் என்று எண்ணியிருந்தாய். தந்திர மந்திர சாமர்த்தியங்களில் உனக்கு இணை யாரும் இல்லை என்று இறுமாந்திருந்தாய். ஆனால் இந்த நாகரிக மறியாத காட்டுமிராண்டிப் பெண் உன்னைத் தோற்கடித்து விட்டாள். கடலில் இறங்கிக் குளித்துக் கொண்டிருந்த உன்னை இந்த மறைந்த மண்டபத்தில் கொண்டு சேர்ப்பதற்கு அவள் கையாண்ட யுக்தியை என்னவென்று சொல்வது? அப்படி அவள் உன் அரைச் சுற்றுச் சுருளை எடுத்துக்கொண்டு ஓடியிராவிட்டால், இத்தனை நேரம் என்ன ஆகியிருக்கும்? பழுவூர் ஆட்களிடம் நீ சிக்கியிருப்பாய். காரியம் அடியோடு கெட்டுப் போயிருக்கும். ஆம் இனி எப்போதும் இம்மாதிரி அஜாக்கிரதையாக இருந்து விடக் கூடாது.'

மேற்குக் கடலில் சூரியன் அஸ்தமித்தது. கோடிக்கரையில் இது ஓர் அற்புதமான காட்சி. அதுவரை தெற்கு நோக்கி வரும் கடற்கரை அந்த முனையில் நேர்கோணமாக மேற்கு நோக்கித் திரும்பிச் செல்கிறது. ஆதலின் கோடிக்கரையில் மேடான இடத்திலிருந்து பார்த்தால் கிழக்கு - மேற்கு - தெற்கு ஆகிய மூன்று திசைகளிலும் கடல் பரந்திருக்கக் காணலாம். சிற்சில மாதங்களில் சூரிய சந்திரர்கள் கிழக்குக் கடலில் ஜோதிமயமாக உதயமாவதையும் பார்க்கலாம். மேற்கே கடலைத் தங்கமயமாகச் செய்து கொண்டு முழுகி மறைவதையும் காணலாம். வந்தியத்தேவனுக்கு மண்டபத்தை மூடியிருந்த மணல் திட்டின் மேல் ஏறிச் சூரியன் கடலில் மறையும் காட்சியைப் பார்க்க ஆவல் உண்டாயிற்று. அதைப் பிரயத்தனப்பட்டு அடக்கிக் கொண்டான்.

நாலாபுறமும் அந்தகாரம் சூழ்ந்து வந்தது. மறைந்த மண்டபத்தில் முன்னமே குடிகொண்டிருந்த இருள் பன்மடங்கு கரியதாயிற்று. வந்தியத்தேவனால் அங்கே மேலும் இருக்க முடியவில்லை வெளியேறி வந்தான். மண்டபத்தை மூடிய மணல் திட்டின் மீது நின்றான். வெகுதூரத்தில் கலங்கரை விளக்கின் ஒளி தெரிந்தது. வானத்தில் வைர மணிகள் சுடர்விட்டு ஜொலித்தன. காட்டில் பல விசித்திரமான ஒலிகள் உண்டாயின. பகலில் வனப்பிரதேசத்தில் கேட்கும் ஒலிகளுக்கும் இரவில் கேட்கும் ஒலிகளுக்கும் மிக்க வேற்றுமை இருந்தது. இரவில் கேட்கும் ஒலிகள் மர்மம் நிறைந்து உள்ளத்தில் பீதியையும் உடலிலே சிலிர்ப்பையும் உண்டாக்கின. பகலில் எதிரே புலியைப் பார்த்தாலும் மனம் பதறுவதில்லை. பயமும் உண்டாவதில்லை. இரவில் ஒரு புதரில் சின்னஞ்சிறு எலி ஓடினாலும் உள்ளம் திடுக்கிடுகிறது.

இதோ குயிலின் குரல் 'குக்கூ!', 'குக்கூ!' அந்தக் குரல் தேவகானத்தைப் போல் வந்தியத்தேவன் காதில் ஒலித்தது. குரல் வந்த திக்கை நோக்கிச் சென்றான். பூங்குழலி அங்கு நின்றாள். 'சத்தம் செய்யாமல் என்னுடன் வா' என்று சமிக்ஞை செய்தாள். அங்கிருந்து கடற்கரை வெகு சமீபம் என்று தெரிய வந்தது.

கடற்கரையில் படகு ஆயத்தமாயிருந்தது. அதில் பாய் மரமும் பாயும் அதைக் கட்டும் கயிறும் சுருட்டி வைக்கப்பட்டிருந்தன. படகிலிருந்து இரண்டு கழிகள் நீட்டிக் கொண்டிருந்தன. அந்தக் கழிகளின் முனையில் ஒரு பெரிய மரக்கட்டை பொருத்திக் கட்டப்பட்டிருந்தது. படகைக் கடலில் இறக்குவதற்கு வந்தியத்தேவன் உதவி செய்யப் போனான்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## மனக்கோட்டை மண்கோட்டை ஆச்சே



பல்லாண்டுகளுக்கு முன்பு பூவையூர் என்ற அழகான குக்கிராமம் இருந்தது. மன்னர் ஆட்சி நடந்து கொண்டிருந்த காலகட்டம் அது. அந்த கிராமத்தில் ராஜா, ராமன் என்ற சிறுவர்கள் இருந்தனர். ஒரே பள்ளியில் ஒரே வகுப்பில் படித்து கொண்டிருந்தனர். ராமன் நேர்மையானவன். கடுமையாக உழைப்பவன். அறிவாளியும் கூட. பெற்றோரும் ஆசிரியரும் பெருமைப்படும்படி நடந்து கொள்வான்.

ராஜா அதற்கு தலைகீழான குணமுள்ளவன். நாணயமில்லாதவன். தேர்வில் ஏமாற்றுவான். மற்றவர்களை பார்த்து எழுதக்கூடியவன். யாரையும் மதிக்கமாட்டான். அடுத்தவர் மீது அன்பு இல்லாதவன். ஆனால் சாமர்த்தியமுள்ளவன். எளிதாக மற்றவர்களை ஏமாற்றுவான். பெரிதாக உழைக்கமாட்டான். ஆனால் வேலைவாங்குவதில் திறமையானவன்.

ராஜாவிற்கு ராமனுக்கும் ஒத்துவருவதில்லை. ராமன் ராஜாவிற்கு உதவ மாட்டான். திருடுவதற்கும் ஏமாற்றுவதற்கும் அடிக்கடி ராஜா உதவி கேட்பான். ராமனோ அதற்கு, "நல்ல காரியத்திற்கு எப்போது வேண்டுமானாலும் உதவி கேள் செய்கிறேன். ஆனால் திருடவோ ஏமாற்றவோ ஒருபோதும் உதவ மாட்டேன்" என கண்டிப்பாக கூறிடுவான். இருவருக்கும் படிப்பு முடிந்தது. வாலிப வயதை அடைந்தனர். ராஜா கிராமத்தை விட்டு நகரத்திற்கு இடம்பெயர்த்தான். ராமன் அதே ஊரில் வசித்து வந்தான். நன்றாக படித்து தேர்ந்தான். ஆனால் தனது தந்தைக்கு உதவும் பொருட்டு அவருடன் விவசாயத்தில் ஈடுபட்டான். தந்தையின் காலத்திற்கு பிறகு அதே சிறிய நிலத்தில் விவசாயம் செய்து எளிமையாக வாழ்ந்து வந்தான். நல்லவன் என்று கிராம மக்கள் அனைவரும் ராமனை நேசித்தார்கள். நிறைய ஆண்டுகள் சென்றன. ராஜாவும் ராமனும் சந்தித்து கொள்ள வாய்ப்பே வரவில்லை.

ராஜாவிற்கு அவன் சென்ற நகரம் சிறப்பாக அமையவில்லை. ஆனால் ஏமாற்றும் வித்தையை மேலும் நுட்பமாக கற்றுக் கொண்டான். அதனால் நாட்டை ஆளும் ஆசை வந்தது அவனுக்கு. மன்னரே ராஜாவின் சொற்களுக்கு மயங்கி அவனை முதலமைச்சர் ஆக்கியதாக ராமனின் காதுகளுக்கு செய்தி வந்தது. அதை ராமன் பெரிதாக பொருட்படுத்தவில்லை. ராஜா யோக்கியன் இல்லை என தெரிந்தும் அதற்கும் அவன் கவலை கொள்ளவில்லை. இப்படித்தான் தனக்கு சம்பந்தம் இல்லாத விசயங்களை பற்றி சிந்திக்க மாட்டான்.

ஒருநாள் ராமன் தனது நிலத்திற்கு தேவையான பொருட்கள் வாங்குவதற்கு நகரத்திற்கு செல்லவேண்டியதாக இருந்தது. பயணத்தில் மிகவும் களைப்பு ஏற்பட்டு அவனுக்கு. அருகில் குடிப்பதற்கு தண்ணீர் தேடினான். பக்கத்தில் மாளிகை போல ஒரு வீடு இருப்பதை பார்த்தான்.

உள்ளே நுழைந்து பணியாட்களிடம் தண்ணீர் கேட்கலாம் என்று பார்த்தான். அதற்குள் ஒரு குரல், "அட ராமா நீயா" என்று. வேறு யாரும் இல்லை அது ராஜா தான். ராஜாவை ராமனுக்கு அடையாளம் தெரியவில்லை.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல செயல் எப்போதும் உலகில் தனக்கு ஓர் இடம் உண்டாக்கிக் கொள்ளும்.
~ எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மனதை நெகிழ வைத்த ஒரு யாசகரின் கொடை

யாசகம் என்ற சொல் பிச்சையைக் குறிப்ப தன்று.

மாறாக உலகப்பற்றைத் துறந்தவர்கள் தமது உணவு, உடை என்பவற்றை இருக்கும் இடம் தேடி வந்து அன்போடு தருபவர்களிடம் பெற்றுக் கொள்வதைக் குறிக்கும்.

ஆம், உலகப்பற்றைத் துறந்த பட்டினத்தடி கள் தன்னிலையைக் குறிக்கும்போது,

*இருக்கும் இடம் தேடி என் பசிக்கே அன்னம் உருக்கமுடன் கொண்டு வந்தால் உண் பேன். வெருக்க அழைத்தாலும் போகேன்* எனக் கூறிநிற்பதை நாம் கருத்தில் கொள்ள முடியும்.

ஆக, வீடுகள் தோறும் சென்று இரப்பது பிச்சை என்ற வகுதிக்குள் அடங்கும்.

யாசகம் என்பது இருக்கும் இடத்தில் இருக்க, தன்னைத் தேடி வந்து அன்போடு தருவதை பெற்றுக் கொள்வதைக் குறிக்கும்.

எனவே பிச்சையை யாசகம் எனப் பொருள்படுத்துவது பொருத்தமன்று.

எனினும் பிச்சை என்ற சொற்பதம் நம் மனங்களில் ஏற்படுத்திய எதிர்வினைத் தாக் கத்தால், அதனை யாசகம் என குறித்துரைக் கும் சூழ்நிலை ஏற்பட்டது.

இஃது பிச்சைக்கும் யாசகத்துக்குமிடை யிலான பொருள் கோடலை விளக்குவதற் கானது மட்டுமே.

இது ஒருபுறமிருக்க, யாழ்ப்பாணம் வண் ணார்பண்ணை வெங்கடேஸ்வரப் பெருமாள் கோயிலில் இருந்து யாசகம் பெறுகின்ற பாபுஜி என அழைக்கப்படும் கணேசன் என் பவர் யாசகத்தின் மூலம் தனக்குக் கிடைத் ததை சிறுகச் சிறுகச் சேமித்து இரண்டு இலட் சம் ரூபாயை வண்ணை வெங்கடேஸ்வரப் பெருமாளுக்கு வழங்கியுள்ளார்.

தனது சேமிப்பில் இருந்த ரூபாய் இரண்டு இலட்சத்தை அவர் ஆலய நிர்வாகிகளிடம் கையளித்தார் என்ற செய்தி ஊடகங்களில் வெளிவந்தபோது மனம் நெகிழ்ந்து போனது.

உண்மையில் அந்த யாசகர் கொடை மனம் படைத்தவர் என்பதில் எந்த விமர்சனமும் இருக்க முடியாது.

இன்றைய சூழ்நிலையில் பிச்சை எடுப்பவர் கள் மீது மக்கள் கடும் கோபமும் விரக்தியும் கொண்டுள்ளனர்.

இதற்குக் காரணம் அவர்களின் நடத் தைக் கோலங்களாகும்.

உண்மை. அநேகமான பிச்சைக்காரர்கள் தாம் எடுக்கின்ற பிச்சையின் பெரும் பகுதியை குடிபோதைக்குச் செலவழித்து விடுகின்ற னர்.

அவர்களின் இத்தகைய செயல்கள் காரண மாக அவர்கள் மீது இரக்கம் கொள்கின்ற மனநிலை மக்களிடம் இருந்து எட்டிவிட்டது.

நிலைமை இதுவாக இருக்கையில், காலம் முழுவதும் வண்ணை பெருமாள் கோயிலில் இருந்து யாசகம் பெற்ற கணேசன் (பாபுஜி) என்பவர் தன்னிடம் இருந்த இரண்டு இலட்சம் ரூபாயை தான் எங்கிருந்து அதனைப் பெற் றாரோ அதனை அவருக்குக் காணிக்கை யாகக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத் தோடு செயற்பட்டாரெனில் அவரின் உள்ளத் தின் உயர்வு எத்துணை மேன்மையானதென் பதை நாம் உணர முடியும்.

பல்வேறு காலச் சூழல்களால் யாசகம் பெறுகின்ற நிலை இருந்த போதிலும் பெற்றுக் கொண்டதை சேமித்து அதனை ஈகை செய்வ தென்பது சாதாரணமான செயலன்று.

# பொலிஸாரிடம் மனச்சாட்சியையும் உண்மைத் தன்மையையும் எதிர்பார்க்கிறோம்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

சகல பொலிஸாரும் மனச்சாட்சியுடனும் உண்மைத்தன்மையுடனும் வேலை செய்வதையே தான் எதிர்பார்ப்பதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் குறிப்பிட்டுள்ளார்.

போதைக்கு எதிராகவும் திட்டமிட்ட குற்றச் செயல்களுக்கு எதிராகவும் பொலிஸார் மேலும் பொறுப்போடு செயற்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பொல்பிதிகம பொலிஸ் நிலையை கட்டடமொன்றை திறந்துவைக்கும் நிகழ்வில் வைத்தே அவர் இதனை தெரிவித்தார்.(7)

## இந்திய முட்டைகள் தொடர்பில் முறைப்பாடுகள் ஏதும் கிடைக்கப்பெறவில்லை

### அரச வர்த்தக பலநோக்கு கூட்டுத்தாபனம்

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள் குறித்து இது வரை முறைப்பாடுகள் எதுவும் வரவில்லை என்று இலங்கை அரச வர்த்தக பலநோக்கு கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் பறவைக் காய்ச்சல் பரவி வருவதாக சமூக வலைதளங்களில் வெளியாகியுள்ள செய்திகள் குறித்து மேற்படி அமைப்பின் தலைவர் வலிசுந்தர கருத்து தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் உள்ள மூன்று அங்கீகரிக்கப்பட்ட ஆய்வகங்களில் நடத்தப்பட்ட சோதனைகளின் பின்னரே அங்கிருந்து முட்டை இறக்குமதி செய்யப்படுகிறது.

இது தொடர்பாக இலங்கையில் நடத்தப்படும் விசாரணைகளின் பின்னரே இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டை விநியோகிக்கப் படுகிறது என அவர் மேலும் கூறியுள்ளார்.

இந்திய முட்டைகள் குறித்து தவறான தகவல்களை பரப்புவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என் அவர் தெரிவித்துள்ளார். (7)

## விபத்தில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி பலி

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கச்சாய் வீதி ஒட்டங்கேணிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொடிகாமத்தில் இருந்து கச்சாய் நோக்கி துவிச்சக்கரவண்டியில் சென்ற முதியவரை மோட்டார் சைக்கிள் மோதியதில் மேற்படி முதியவர் படுகாயமடைந்திருந்தார்.

இந்நிலையில் முதியவர் சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.கச்சாய் வீதி கொடிகாமத்தைச் சேர்ந்த 70வயதான தெய்வேந்திரநாதன் என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7.30)

## புதிய ஊழியர்களை உள்ளீர்க்க போக்குவரத்து சபை திட்டம்

பல்வேறு மோசடிச் சம்பவங்கள் காரணமாக மாதாந்தம் சுமார் 100 பஸ் நடத்துனர்களை பணிநீக்கம் செய்ய நேரிட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக பஸ் நடத்துனர்கள் 381 பேரும் சாரதிகள் 912 பேரும் புதிதாக சேவையில் இணைத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் தெரிவித்தார். (7)

## சைபர் தாக்குதல் விசாரணை ஆரம்பம்

அரச நிறுவனங்களின் மின்னஞ்சல் முகவரிகள் மீது மேற்கொள்ளப்பட்ட சைபர் தாக்குதல் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கடந்த ஓகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட இந்த சைபர் தாக்குதலினால் அமைச்சரவை அலுவலகம் உள்ளிட்ட அரச மின்னஞ்சல் முகவரிகளின் தரவுகள் அழிவடைந்திருந்தன.

தொழில்நுட்பம் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு பதில் அமைச்சர் கனக ஹேரத்தினால் முன்வைக்கப்பட்ட அறிவிப்பை தொடர்ந்து இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (7)

## துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி மகள் பலி; தந்தை படுகாயம்

(கொழும்பு)

மருதானை, மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்திற்கு அருகில் துப்பாக்கிப் பிரயோகம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான தந்தையும் மகளும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில், 6 வயது மகள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மருதானை பொலிஸார்.மேற்கொண்டு வருகின்றனர்.(7)

## சதொச ஊழியர்களுக்கு கட்டாய ஓய்வு

சதொச மறுசீரமைப்பின் கீழ் இம்மாதம் 30 ஆம் திகதிக்குள் அதன் ஊழியர்களை கட்டாயமாக ஓய்வு பெறுவதற்கு சதொச பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது.

இதன்படி சதொசவில் பல்வேறு பதவிகளில் பணியாற்றிய 292 பேர் கட்டாய ஓய்வு பெற உள்ளனர்.

வர்த்தக, வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளீன் பெர்னாண்டோ அமைச்சரவையில் சமர்ப்பித்த பத்திரத்திற்கு அனுமதி கிடைத்துள்ளதால் சதொச நிர்வாகம் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

சதொச நிறுவனத்தின் தலைவர் பசந்த யாப்பா அபேவர்தனவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையில், இந்த கட்டாய ஓய்வு பிரேரணையின் பிரகாரம் அனைத்து ஊழியர்களுக்கும் செப்டெம்பர் மாதம் சம்பளம் வழங்கியதன் பின்னர், எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் மாதாந்த சம்பளம் அல்லது வேறு கொடுப்பனவுகள் வழங்கப்பட மாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முடிவுக்கு அதன் ஊழியர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இதன்படி, அமைச்சின் தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து சதொச ஊழியர்கள் அடுத்த வாரம் முதல் தொழில் ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் நடவடிக்கை எடுக்க தீர்மானித்துள்ளனர். (7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** இருகுவெளி, மறவன்புலவு, தனங்கிளப்பு ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** சமணங்குளம், அளுத்கம ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூரின் இனம் சாரா அரசியல் ஒன்பதாவது குடியரசுத் தலைவராக

## இலங்கை வம்சாவளித் தமிழர் தர்மன் தெரிவு

01

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



**ஒரு சதவீதத்திற்கும் மிகக் குறைவான இலங்கை வம்சாவளி தமிழர்களைக் கொண்ட சிங்கப்பூரின் ஒன்பதாவது ஜனாதிபதியாக 70% மக்கள் வாக்குகளைப் பெற்று இலங்கை வம்சாவளித் தமிழர் தர்மன் தெரிவு**

இலங்கை வம்சாவளி தமிழரான தர்மன் சண்முகரத்தினம் அண்மையில் நடந்த சிங்கப்பூர் குடியரசுத் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்று 2023 ஆம் ஆண்டு செப்டெம்பர் 14 ஆம் திகதி சிங்கப்பூரின் ஒன்பதாவது குடியரசுத் தலைவராகப் பதவியேற்கிறார். இவர் தேர்தலில் 70.4% வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்தார். இவரது பாட்டனார் இலங்கை, யாழ்ப்பாண மாவட்டம், ஊரெழு என்ற ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

தர்மன் சண்முகரத்தினம் தவிர, காக் சோங் (75), டான் கின் லியான் (75) ஆகிய இருவரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டனர். 25 இலட்சத்துக்கும் அதிகமான வாக்காளர்கள் தங்களின் வாக்குகளை செலுத்தினர். இதில், 70.4 சதவீத வாக்குகளைப் (1,746,427 வாக்குகள்) பெற்று தர்மன் சண்முகரத்னம் வெற்றி பெற்றுள்ளார். அவரை எதிர்த்து போட்டியிட்ட காக் சோங் (390,041 வாக்குகள்) 15.7 சதவீத வாக்குகளையும் டான் கின் லியான் (344292 வாக்குகள்) 13.88 சதவீத வாக்குகளையும் பெற்றனர். 60 சதவீதமான மக்களின் செல்வாக்கை பெற்ற ஆளும் மக்கள் செயல் கட்சியின் ஆதரவைப் பெற்று தேர்தலில் போட்டியிட்ட தர்மன் 70 சதவீத வாக்கைப் பெற்றதென்பது எதிர்க்கட்சிகளும் அவருக்கு ஆதரவு வழங்கியதை காட்டுகின்றது.

1959ஆம் ஆண்டு சுதந்திரத்திற்குப் பின் சிங்கப்பூர் இதுவரை 3 பிரதமர்களை மட்டுமே கண்டுள்ளது. அவர்கள் மூவருமே பெரும்பான்மை சீன இனக் குழுவைச் சேர்ந்தவர்கள்.முதல் பிரதமரான லீ குவான் யூ-வின் மகனான லீ சியென் லூங் தான் தற்போது அந்நாட்டின் பிரதமராக இருக்கிறார். 2025ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன்பாக அடுத்த பிரதமராக தர்மன் சண்முகரத்னத்தை அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது.

ஆனால், அது பெரும்பான்மை சீனர்களை தர்மசங்கடப்படுத்தும் என்ற கருத்து கட்சிக்குள் எழுந்ததால் அதுகுறித்த தயக்கம் இருந்து வந்தது. தர்மன் சண்முகரத்னமும் தாம் பிரதமர் பதவிக்கு ஆசைப்படவில்லை என்று வெளிப்படையாக அறிவித்தார்.

தர்மன் சண்முகரத்தினம் அரசியல்வாதியும் பொருளியளாளரும் ஆவார். இவர் 2019 முதல் சிங்கப்பூரின் மூத்த அமைச்சராகவும் 2015 முதல் சமூகக் கொள்கைகளுக்கான ஒருங்கிணைப்பு அமைச்சராகவும் 2011 முதல் சிங்கப்பூரின் நாணைய ஆணையத்தின் தலைவராகவும் பணியாற்றி வருகிறார். இவர் முன்னதாக 2011 முதல் 2019 வரை துணைப் பிரதமராகவும் 2003 முதல் 2008 வரை கல்வி அமைச்சராகவும் 2007 முதல் 2015 வரை நிதி அமைச்சராகவும் பணியாற்றியிருந்தார். ஆளும் மக்கள் செயல் கட்சியின் உறுப்பினராக உள்ள இவர், 2001 முதல் தமாசுரோங் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வருகிறார்.



தர்மன் சண்முகரத்தினம்

ஒரு பொருளாதார நிபுணரான தர்மன், சிங்கப்பூருக்கான அரசு சேவையில், முக்கியமாக பொருளாதார மற்றும் சமூகக் கொள்கைகளுடன் தொடர்புடைய பணிகளில் பெரும் பங்காற்றினார். பல்வேறு உயர்மட்டப் பன்னாட்டுப் பேரவைகளுக்குத் தலைமை தாங்கி செயற்பட்டார். தர்மன் தற்போது முப்பது நாடுகள் அடங்கிய பொது மற்றும் தனியார் துறைகள் மற்றும் கல்வித்துறையைச் சேர்ந்த பொருளாதார மற்றும் நிதித் தலைவர்களின் உலகளாவிய பேரவையின் தலைவராக உள்ளார். ஐ.நா தண்ணீரின் பொருளாதாரத்திற்கான உலகளாவிய ஆணையத்தின்இணைத் தலைவராகவும் உள்ளார். அத்துடன் ஐக்கிய நாடுகளின் பன்முகத் தன்மைக்கான உயர்மட்ட ஆலோசனைக் குழுவின் உறுப்பினராகவும் உள்ளார்.

தர்மன் 2021 இல் ஜி-20 உயர்மட்ட சுயாதீனக் குழுவிற்குத் தலைமை தாங்கினார். அனைத்துலக நாணய நிதியத்தின் முக்கிய கொள்கை மன்றமான பன்னாட்டு நாணய மற்றும் நிதிக் குழுவின் தலைவராக நான்கு ஆண்டுகள் இருந்த முதலாவது ஆசியத் தலைவராக ஆனார். கூடுதலாக, இவர் தற்போது ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டத்தின் மனித மேம்பாட்டு அறிக்கைக்கான ஆலோசனைக் குழுவின் இணைத் தலைவராகவும் உலகப் பொருளாதார மன்றத்தின் அறங்காவலர் குழுவின் உறுப்பினராகவும் உள்ளார்.

2001 பொதுத் தேர்தலில் தர்மன் அரசியலுக்கு அறிமுகமானார். 2006, 2011, 2015, 2020 ஆகிய ஆண்டுகளில் நடந்த பொதுத் தேர்தல்களில் நான்கு முறை மீண்டும் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். 2023 யூன் 8 அன்று, தர்மன் 2023 செப்டெம்பரில் நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலுக்கான தனது வேட்புமனுவை அறிவித்தார். அதைத் தொடர்ந்து, அரசாங்கத்தில் உள்ள அனைத்து பதவிகளிலிருந்தும் மக்கள் செயல் கட்சியில் இருந்தும் 2023 யூலை 7 முதல் விலகுவதாக அறிவித்தார்.

1957 ஆம் ஆண்டில் சிங்கப்பூரில் பிறந்தவர் தர்மன். தர்மனின் தந்தை கே.சண்முகரத்தினம் மருத்துவப் பேராசிரியராவார். ஆங்கிலோ-சீனக் கல்லூரியில் கல்வி கற்ற இவர் லண்டன் பொருளியக் கல்லூரியில் பொருளியலில் பட்டம் பெற்றார். பின்னர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பொருளியலில் முதுமாணிப் பட்டமும் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் பொதுப்பணித் துறையில் முதுமாணிப் பட்டமும் பெற்றார். தர்மன் ஜப்பாணிய-சீன வழக்கறிஞரான ஜேன் யுமிக்கோ இட்டோகி என்பவரைத் திருமணம் புரிந்தார். இவர்களுக்கு மூன்று ஆண்களும் ஒரு பெண்ணுமாக நான்கு பிள்ளைகள் உள்ளனர்.

1965 ஆம் ஆண்டில் மலேசியா கூட்டமைப்பில் இருந்து சிங்ப்பூர் பிரிந்து சென்று சிங்கப்பூர் குடியரசாக மாறியது. அதன் பிறகு அதே 1965 ஆம் ஆண்டில் அதிபர் எனும் சிங்கப்பூர் குடியரசுத் தலைவர் பதவி உருவாக்கப்பட்டது.

சிங்கப்பூர் குடியரசுத் தலைவர் (President of the Republic of Singapore) என்பவர் சிங்கப்பூர் குடியரசின் நாட்டுத் தலைவர் ஆவார். அதிபர் என்று அழைக்கப்படுகிறார். சிங்கப்பூரில் நடைமுறையில் உள்ள வெஸ்ட்மினிஸ்டர் நாடாளுமன்ற முறைமையின் கீழ் அரசின் தலைவர் (Head of Government) சிங்கப்பூரின் பிரதமர் ஆவார். குடியரசுத் தலைவர் எனும் அதிகாரபூர்வ அழைப்புப் பெயர், பெரும்பாலும் ஒரு சடங்குப் பெயராகவே கருதப்பட்டது. 1993ஆம் ஆண்டிற்கு முன்பு, சிங்கப்பூர் அதிபர் நாடாளுமன்றத்தால் நியமிக்கப்பட்டார்.

1991 ஆம் ஆண்டில் சிங்கப்பூரின் அரசியல்-சாசனங்கள் திருத்தப்பட்டன. அதன் பிறகு, குடியரசுத் தலைவர், சிங்கப்பூர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். சிங்கப்பூரில் முதலாவதாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட குடியரசுத் தலைவர் ஒங் தெங் சியோங். 1991ஆம் ஆண்டில் நடந்த சாசன மாற்றங்களால், குடியரசுத் தலைவருக்குச் சில தனிப்பட்ட உரிமைகள் அளிக்கப்பட்டன. குடியரசுத் தலைவரின் அதிகாரபூர்வ இல்லம் இஸ்தானா சிங்கப்பூர் ஆகும்.



சிங்கப்பூர் அதிபரின் அதிகாரத்துவ இல்லம் இஸ்தானா

(தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.பல்கலை...

கொலை செய்து கொண்டுள்ளார்.

அவர் வீட்டில் தூக்கிட்டிருந்த நிலையில் சகோதரனால் மீட்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

அதனையடுத்து, குறித்த சடலம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வைக் கப்பட்டுள்ளதுடன், பொலிஸாரால் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. (7)

## கடலுக்குள்...

ழுந்துள்ளார்.

திருகோணமலையை சேர்ந்த நிமல் கருணாரத்ன (வயது - 44) என்பவரே உயிரிழந்துள்ளார்.

தென்பகுதியைச் சேர்ந்த பலநாள் மீன்பிடி படகுகள், பருத்தித்துறை துறைமுகத்தில் ஓய்வெடுத்து செல்வது வழமையாகும்.

அவ்வாறு நேற்று முன்தினம் சனிக்கிழமை ஓய்வின் பின்னர் மீண்டும் ஆழ் கடல் நோக்கி சென்ற படகில் இருந்த கடற்றொழிலாளர் ஒருவர் தவறி கடலில் விழுந்துள்ளார்.

கடலில் விழுந்தவர் உயிரிழந்த நிலையில் அவரது சடலம் சக கடற்றொழிலாளர்களால் மீட்கப்பட்டு, கரைக்கு கொண்டு வரப்பட்டதை அடுத்து, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (7,33,104)

## தென் சீன கடல்...

ஹுனுபிட்டிய கங்காராம விகாரையினால் நடத்தப்பட இருப்பதோடு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் ஆரம்ப நிகழ்வு நடைபெற உள்ளது.

இந்த வட்டமேசை மாநாட்டின் பூர்வாங்க ஏற்பாடு தொடர்பான கலந்துரையாடல் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்னாயக்கவின் தலைமையில் நடைபெற்றது.

சீனாவின் ஷென்ஸன் வட்டமேசை மாநாடு வருடாந்தம் நடைபெற்று வருவதோடு "ஒற்றுமையுடன் ஒன்றாக பயணித்து பட்டுப்பாதையின்ஞானத்தை பெறுவோம்" என்ற தொனிப்பொருளின் கீழ் 22 நாடுகளின் பங்கேற்புடன் இம்முறை மாநாடு இலங்கையில் நடைபெறும் என்றும் இதன்போது அறிவிக்கப்பட்டது. (7)

பவனி திருகோணமலை நோக்கிப் பயணித்தபோது கப்பல்துறை இராணுவ முகாம் அருகில் சிங்கக் கொடியேந்திய பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சிலரினால், வீதியில் தடைகள் ஏற்படுத்தப்பட்டு ஊர்தியினது வழி மறிக்கப்பட்டது.

இதன்போது முகத்தை கறுப்புத் துணிகளால் மறைப்புச் செய்தவர்கள் ஊர்தி மீது கல்லுகள் கொண்டு சரமாரியாகத் தாக்குதல் நடத்தினர்.

இத் திடீர் தாக்குதலை சுதாகரித்து கொண்டு ஊர்தி தொடர்ந்து பயணிக்க முற்பட்ட வேளையில், மீண்டும் சர்தாரபுர சந்திக்கு அருகில் வீதிக்கு குறுக்கே தடைகளை ஏற்படுத்தியதோடு அங்கு காத்து நின்ற ஆண்களும் பெண்களும் வாகனத்தை சுற்றிவளைத்து கொட்டன்களால் தாக்கியுள்ளனர்.

இதன்போது வாகனத்தினுள் அமர்ந்திருந்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் சட்டத்தரணி காண்டீபன் ஆகியோர் வாகனத்தில் இருந்து இறக்கப்பட்டு தாக்கப்பட்டுள்ளனர்.

இதையடுத்து ஊர்தியானது தம்பலகாமம் பகுதிக்கு திருப்பியனுப்பப்பட்டுள்ளது.

இச்சம்பவம் இடம்பெற்ற வேளையில் பொலிஸார் இராணுவத்தினர் புலனாய்வாளர்கள் சம்பவ இடத்தில் பிரசன்னமாகியிருந்ததுடன் குறித்த சம்பவத்தினை அவர்கள் தடுக்க முற்படவில்லை.

இதேவேளை நேற்று முன்தினமும் ஊர்திப் பவனிக்கு மூன்று இடங்களில் கடும் எதிர்ப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7,33,104)

கஜேந்திரன் மீதும் தாக்குதல் நடத்தியமை வன்மையான கண்டனத்திற்குரியது.

என நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான் தெரிவித்துள்ளார்.

ஈழவிடுதலையில் ஆயுதப் போராட்டத்தின் அறத்தினையும், அவசியத்தினையும் தனது அகிம்சை போராட்டத்தின் மூலம் உலகிற்கு உணர்த்திய விடுதலைப்பேரொளி திலீபனின் ஈகத்தினைக்கூட நினைவுகூரக்கூடாது என்று விடுதலைப்போர் மௌனிக்கப்பட்ட 14 ஆண்டுகளுக்குப் பிறகும் சிங்களக் காடையர்களை ஏவி இலங்கை அரசு திலீபன் நினைவேந்தலைத் தடுத்து நிறுத்துமாயின் தமிழர்கள் மீதான சிங்கள இனவெறி மனப்பான்மை என்றைக்கும்மாறாது என்பதற்கு இக்கொடும் நிகழ்வு மற்றுமொரு சான்றாகும்.

தமிழ் மக்களின் சனநாயக பிரதிகளின் மீதான வன்முறை தாக்குதல் தொடர்ச்சியாக நடைபெறும் நிலையில் இந்திய அரசு அதனை அமைதியாக வேடிக்கை பார்ப்பது ஏன்? தமிழக அரசு வழக்கம் போல் கடந்து செல்லாமல் உடனடியாக, ஈழத்தமிழர்கள் மீதான இலங்கை அரசின் இனவாத அடக்குமுறைகளைத் தடுத்து நிறுத்த இந்திய அரசினை வலியுறுத்த வேண்டுமென நாம் தமிழர் கட்சி சார்பாக கேட்டுக் கொள்கிறேன் என்றார். (7,104)

## அனைத்து...

ஸ்கேன் பரிசோதனை சேவைகள், இதய வடிகுழாய்பரிசோதனை அறுவை சிகிச்சை அறைகள் மற்றும் கதிர்வீச்சு பரிசோதனை சேவைகள் நிறுத்தப்படும் அபாயம் இருப்பதாக அரசு அறிவியல் தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கதிரியக்க தொழில்நுட்ப நிபுணர்கள் பற்றாக்குறை மற்றும் வெளிநாடுகளில் பணியாற்றிய சிலர் வெளியேறியமையினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அரசாங்கத்தின் கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் சங்கத்தின் தலைவர் சானக தர்மவிக்ரம தெரிவித்தார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலை, கொழும்பு றிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை, பேராதனை சிறிமாவோ பண்டாரநாயக்க சிறுவர் வைத்தியசாலை, மஹாநுவர போதனா வைத்தியசாலை, கராப்பிட்டி, அநுராதபுரம், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, இரத்தினபுரி, பதுளை, கேகாலை மற்றும் பொலநறுவை ஆகிய வைத்தியசாலைகளில் பரிசோதனைகள் நிறுத்தப்படும் எனவும் சங்கத்தின் தலைவர் சானக தர்ம கீர்த்தி மேலும் தெரிவித்தார். (7)

## பயங்கரவாத...

பாராளுமன்றத்தில் முதல் வாசிப்பின் பின்னர், அதற்கு எதிராக ஆட்சேபனைகள் இருப்பின் உயர் நீதிமன்றில் மனு தாக்கல் செய்ய முடியும் என அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (7)

## திலீபனின்...

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக அகிம்சை வழியில் போராடிய "தியாக தீபம்" திலீபனின் நினைவேந்தல் வாரத்தினை முன்னிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் கடந்த 15ஆம் திகதி பொத்துவில் தொடக்கம் யாழ்ப்பாணம் வரையான தியாகி திலீபனின் புகைப்படம் தாங்கிய ஊர்திப் பவனி ஆரம்பமாகியது.

நேற்றைய தினம் மூதூர் கட்டைப் பறிச்சான் பகுதியில் இருந்து ஊர்திப்

## கொழு...

வருகை தந்த விசாரணைக்குழு தனது முதற்கட்ட விசாரணைகளை நிறைவு செய்து நேற்று கொழும்பு திரும்பியது. (7)

## இன...

களை நினைவுகூரும் வகையில் தமிழ் மக்களால் உருவாக்கப்பட்டிருந்த திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி மீது சிங்களக் காடையர்கள் தாக்குதல் நடத்தி அதனை சிதைத்ததோடு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் அன்புச் சகோதரர் செல்வராசா

### மெகா பவர்
திகதி 17/09/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1588
R 21 03 13 50 73
14478

### தன நிதானய
திகதி - 2023.09.17
சீட்டிழுப்பு இலக்கம் - 1270
A 32 33 49 72 A
03775

### லக்கி 7
திகதி 17.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0066
L7 இலக்கம் 0 5
வெற்றி இலக்கினம்: துலாம்
வெற்றி இலக்கங்கள்: 1 0 0 0 4 1

### கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3482
சீட்டிழுப்பு திகதி 17.09.2023
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 23 39 60 79
M 04334

### HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.09.17
சீட்டிழுப்பு இலக்கம் 549
கும்பம் 10 24 41 47 கும்பம்

### மஹஜன சம்பத
திகதி 2023/09/17
சீட்டிழுப்பு இலக்கம் 5240
P 8 4 9 8 4 3

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2214 — வர்ணம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.09.17 — தினம் ஞாயிற்றுக்கிழமை
07 08 10 19 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 67,245,692.40
32463 806

### சனிதா
திகதி 2023.09.17 — வெற்றி வாரம் 4375 — வர்ணம் இளஞ்சிவப்பு
13 35 53 66 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.57,740,632.00
75068 983

### சசிரி
வெற்றி வாரம் 377
சீட்டிழுப்பு திகதி 2023.09.17
வெற்றி இலக்கங்கள் 15 22 31
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,472,640/-

### ராசி
சீட்டிழுப்பு வாரம் 3926 — வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.09.17 — தினம் ஞாயிற்றுக்கிழமை
03 15 30 45
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,162,304/-
33101 594

### ஜய
திகதி 17.09.2023 — வெற்றி வாரம் 1390 — வர்ணம் மஞ்சள்
J 26 01 08 11 71
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 440,994,964.20
38086 786

### அட கோடிபதி
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் 2040
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,110,360/-
சீட்டிழுப்பு திகதி 2023.09.17
14 22 64 75 V
80596 191

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17099)

076 825 7716 (ஆகாஸ்)



## Pearson International College

**Applications are called for IELTS tutors**

- Candidates should have minimum HND in English or any other academic qualification in english medium
- previous IELTS score above or equal to 6.5 is recommonded (not necessary)
- Prior teaching experience would be an added advantage
- Should be able to work during weekends

Email your CV within three days of this advertisement to Pearsoncollege 2020@gmail.com, admin@picsl.lk

(C-7268)

**Call +94 74 188 7878 for more info**

No.21,3rd Lane, Power house Road, Jaffna.



ACCOUNTING TAMIL & ENGLISH MEDIUM

## BALAKAJEN SIR இன்

சாதனை பாதையில் ...
2022 (2023) உயர்தர வர்த்தக பிரிவில்
JAFFNA DISTRICT RANK

பாராட்டி வாழ்த்துகின்றேன்

1

J.ANNE DINUJA
- ACCOUNTING - A
- BUSINESS STUDIES - A
- ECONOMICS - A

யாழ் மாவட்டத்தின் முன்னணி பெறுபேறுகள்
DISTRICT 01 உட்பட 02(கிளி), 03, 04(மன்), 05, 08, 10, 13, 22

இம் முறையும் ACCOUNTING இல் அதி கூடிய A மற்றும் B சித்திகள்

(17122)

நேரடி மற்றும் ZOOM ஊடாக A/L கணக்கீட்டு வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

ADMISSION OPEN.... 077-452-0043

NEC - JAFFNA, KBK - கந்தர்மடம், கொழும்புத்துறை

ONLINE வகுப்புக்கள்



## காணி

### விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் நாவற்குழியில் 120 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.**

- வீடு கட்டுவதற்கும் களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்.
- நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- யாழ் பஸ் நிலையம் 3 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300,000/=)
- A-9 வீதியில் இருந்து 200 மீற்றர் தூரம்
- தரகர் தேவையில்லை
- நன்னீர் ஊற்று.

(17125)

தொடர்பு

077 623 4204
076 755 8606
077 076 0389



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127



## வணிகக்கல்வி

சக்திவடிவேல் பிரதீபன்
HNDA, M.COM, PGDE

**2022(D), 2023**

வர்த்தக பிரிவுகள் துரித மீட்டல் வகுப்புக்கள் நடைபெறுகின்றன

பொருளியற் கல்லூரி - யாழ் நகர்
திங், செவ், வியாழன் :
6.00A.M - 7.00A.M

பொருளியற் கல்லூரி - சுன்னாகம்
சனி, ஞாயிறு :
5.00P.M - 7.00P.M

பாரதி - சித்தங்கேணி
செவ், வியாழன் :
5.00P.M - 7.00P.M

(C-7277)



## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

யாழ் - கொழும்பு 2,900/=
வடமராட்சி - கொழும்பு 2,700/=

(17019)

T.P:077 544 8503



## மலிவு விற்பனை

SILVER SHIELD

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram money transfer


ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7273)

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470


## மரண அறிவித்தல்

# சின்னத்தம்பி நவரத்தினம்

(ஓய்வுபெற்ற இலங்கை மின்சார சபை ஊழியர்)



| மண்ணுலகம் | விண்ணுலகம் |
|---|---|
| 01.02.1947 | 17.09.2023 |

கப்பம்புலம் சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் காளி கோவிலடி சுன்னாகம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நவரத்தினம் அவர்கள் 17.09.2023 நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம் - சரசுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் இரத்தினாம்பிகையின் பாசமிகு கணவரும் தர்சினி, கிருபானந்தன் (இ.மி.ச), துஷ்யந்தினி, திவாகரன்(கிருபா லேணர்ஸ்), தேனுகா(நோத் ஸ்ரார் பாமசி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சபீலா, நளினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பவித்திரன், ஸகித்திரன், கஷ்விகா ஆகியோரின் நேசமிகு பேரனும் அமரர் இராசதுரை, திருநாவுக்கரசு(டென்மார்க்), கமலாதேவி, விவேகசிந்தாமணி, மகேந்திரராசா, தர்மலிங்கம்(சவுந்தன்), கலைவதனி, மதிவதனி ஆகியோரின் அருமைச் சகோதரரும் பூரணம், ஜெயலக்சுமி, அமரர் அருமைத்துரை, வில்வராசா, கௌசலாதேவி, வசந்தினி, துரைசிங்கம், கனகராசா, அமரர் சரசுலிங்கம், செல்வநாயகி, தசநாயகி(சுவிஸ்), ஸ்ரீதேவி, அமரர் கேசவராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.09.2023 இன்று திங்கட்கிழமை பி.ப 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
077 340 9881(மகன்)

(17120)

தகவல் :
குடும்பத்தினர்


## வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் DHL

சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
0777 554 528 (17124)



## வேலையாட்கள் தேவை

வீட்டு வேலைக்கு சமையல் தெரிந்த பெண் ஒருவர் தேவை.
இடம் : K.K.S வீதி, கோண்டாவில்
தொடர்புகளுக்கு (17119)

077 713 0872



## மாடி வீடு விற்பனைக்கு

காரைநகர் இடைப்பிட்டியில் உள்ள மாடி வீட்டுடன் கூடிய 5 பரப்புக் காணியும் வீட்டுத் தளபாடங்களும் விற்பனைக்குண்டு

(17086)

077 088 6126
076 645 8455



## குத்தகைக்கு தேவை

வான்கள் குத்தகைக்கு தேவை.
தகுந்த பெறுமதி வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு : (17107)

077 971 5379



## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

VISA • STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

(C-7276)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777



## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி • சுன்னாகம்
- சாவகச்சேரி • மானிப்பாய்
- நெல்லியடி • பருத்தித்துறை
- திருகோணமலை • வல்வெட்டித்துறை
- கோப்பாய் • புத்தூர்
- பண்டத்தரிப்பு • சங்கானை
- கொழும்பு

(C-7276)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தால் இல. 191, ... எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org